# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 24 □ ஓகஸ்ட் 05 - ஒக்ரோபர் 05 □ ISSN 1474 - 8770

## 'செக்' வைக்கிறார் சிதம்பர நடராஜர்



## தடம்மாறிய லண்டன் தமிழ் அமைப்புகள்



## தெற்காசியாவில் தொடரும் புரட்சி



# வெல்பவர் யாரோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள் நூல் வெளியீடு செப். 13ல் வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது. இது யாழ்ப்பானத்தின் ஆதிச்சுவடுகள் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும் என்றும் சிங்கள வரலாற்று ஆய்வாளர்களை முற்று முழுதாக நிராகரிப்பது பொருத்த மற்றது என்றும் சுட்டிக் காட்டினார் மு நித்தியானந்தன். அவர் மேலும் கூறுகையில் நூலாசிரியர் கலாநிதி தியாகராஜாவின் எழுத்தின் எளிமையை ஒரு ஆபத்தான எளிமை என்றார்.



2. Anti Social Behaviour - சமூகப் பிறழ்வான பழக்கங்களை நிறுத்தும் அரசின் செய்தியை சமூகத்திடம் பிளேயர் கவுன்சிலர் போலை சந்தித்து பாராட்டுத் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வு செப் 2ல் வட்போட்டில் உள்ள மெரீடியன் கொம்யுனிற்றி சென்ரரில் இடம்பெற்றது. இவருக்கு Home Office Together Taking A Strand என்ற விருது கடந்த ஆண்டு வழங்கப்பட்டிருந்தது. தற்போது Tamil Community Forum என்ற அமைப்பை உருவாக்கி Anti Social Behaviour யை களைவதில் மும்மரமாக ஈடுபட்டுள்ளார்.



3. உடத்தலவின்ன சிந்தனை வட்ட இயக்குநரும் 'நவமணி' பத்திரிகை ஆசிரியருமான கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன், நூலகர் செல்வராஜாவுக்கு 'எழுத்தியல் வித்தகர்" பட்டமும் விருதும் வழங்கி கௌரவித்தார். சிந்தனை வட்டமும் மத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியமும் இணைந்து நடாத்திய இந்நிகழ்வு செப் 11ல் கண்டியில் இடம்பெற்றது. 27 ஓகஸ் 3வது ஆயிரம் நூல்களின் பதிவுகளைக் கொண்ட நூல்தேட்டம் 3 கொழும்பு தமிழ் சங்கத்தில் வெளியிடப்பட்டது.



4. (புதியவன்) சண் எடுக்கும் 'மண்' திரைப்படம் இலங்கையின் புத்தளம் - உடப்பு, முந்தல், அண்டிகம, நவ்வடன் குளம் பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ளது. ஈழத்து கலைஞர்கள் பிரசன்னா (கதாநாயகி), செல்வசேகரன் லண்டன் கலைஞர்கள் பிரசாந் (கதாநாயகன்), ராதாகிருஷ்ணன் தென்னிந்திய நடிகர்கள் சந்திரசேகர், சுகுமார் (காதல்), சிங்களக் கலைஞர்கள் எனப்பலர் நடிக்கின்றனர். 'மண்' தாயக மண்ணில் காணப்படும் ஆழமான முரண்பாட்டை காதலினூடாக வெளிப்படுத்த முயற்சி எடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே :

01 தேசத்தின் பார்வை
02 லண்டன் செய்திகள்
06 பெண்கள் (மட்டும்) சந்திப்பு
07 ஆட்டக்காரர்கள் அணி மாறினர்! நீதிமன்றில் TCHA
08 அன்புள்ள தங்கர்பச்சான் அவர்களுக்கு
10 மீட்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள்
12 இந்திய வெளியுறவுக் கொள்கை
13 தடம்மாறிய லண்டன் தமிழ் அமைப்புகள்
17 சந்திப்பு : லீனா மணிமேகலை
21 மேற்குத் தமிழனின் சுற்றுலாவும் அது ஏற்படுத்தும் சமூக அதிர்வும்
23 தெற்காசியாவில் தொடரும் புரட்சி
27 தோல்வி கண்ட ட்ரொட்ஸ்கிய வாதம்
29 வாசகர்களம்
30 துப்பாக்கிகளின் காலம்
31 சிறுவர் தேசம்

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# வெல்பவர் யாரோ

இருபத்திநான்கு மணிநேரத்தில் இரு பாடசாலை அதிபர்கள் யாழில் கொல்லப்பட்டனர். வடக்கு, கிழக்கில் படுகொலைகள் நாளாந்த வாழ்வியலாக உள்ளது. தென்பகுதியில் அதிகார துஸ்பிரயோகமும் மோசடிகளும் பாதாளக் குழுக்களும் நாளாந்த அம்சமாகி உள்ளது. இலங்கை மக்களின் வாழ்வு இவ்வாறு மோசமடைந்து வரும் போது சுனாமி தாக்கி நிலைமையை மேலும் மோசமாக்கியது. .இந்நிலையில் நவம்பர் 17 இலங்கை மக்கள் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப் போகிறார்கள்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு வித்திட்டு 60,000க்கும் மேற்பட்ட உயிர்கள் கொல்லப்படுவதற்குப் பொறுப்பாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் பின்னால், தமிழ், முஸ்லீம், மலையக சிறுபான்மை இனங்கள் அணிவகுத்து நிற்கின்றனர். மறுமுனையில் சுதந்திரக் கட்சி, ஜேவிபியுடனும் தீவிர இனவாதிகளான ஹெல உறுமயவுடனும் அணிசேர்ந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி சர்வ அதிகாரங்களைக் கொண்டிருந்த போதும் அவரது அதிகாரங்களும் புறச் சூழலால் மட்டுப்படுத்தப்பட்டே உள்ளது. பாணின் விலையை ஏற்றுவது, பாராளுமன்றத்தைக் கலைப்பது போன்ற வழமையான அதிகாரங்கள் தான் ஜனாதிபதிக்கு உள்ளது. இத்தேர்தலின் முக்கிய அம்சங்களான பொருளாதாரக் கட்டுமானம், இனப்பிரச்சினைத் தீர்வு ஆகிய இரு விடயங்களிலும் எவர் ஜனாதிபதியானாலும் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் யுத்தம் வரும் என தமிழ் தரப்பினர் ஓங்கி முழங்குவது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு குடைபிடிப்பதற்காகவே. சிறுபான்மையின கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவை வெண்புறாவாகக் காட்டுவது கொமிசனுக்காகவே ஒழிய அவர் தமிழ் மக்களுக்கு தமிழீழமோ சமஸ்டியோ பெற்றுத் தருவார் என்பதனால் அல்ல. அது நடக்காது என்பதும் ஆய்வாளர்களிலும் பார்க்க அவர்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரியும்.

சுதந்திரக் கட்சி - ஜேவிபி கூட்டு முழுமையாக சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே குறி வைத்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களே தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர். இருப்பினும் சிறுபான்மை இனங்களையும் வென்றெடுக்க வேண்டிய தேவையை இக்கட்சிகள் முற்றாகப் புறக்கணிக்க முடியாது. தாம் சிங்கள மக்களை மட்டுமே ஆட்சி செய்யத் தகுதி உடையவர்கள் என்பதையே இது வெளிப்படுத்தும்.

இலங்கை மக்கள் எப்போதும் பிளவுபட்டு இருப்பதையே குறும் தேசியவாதம் பேசும் அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக அரசியல் பிரதிநிதிகளும் விரும்புகின்றனர். இவர்கள் தங்களதும் கட்சிகளினதும் தேவைகளுக்காக இலங்கை மக்கள் ஐக்கியப்படுவதை எப்போதும் அனுமதிக்க மாட்டார்கள். இவர்கள் யார் எந்த அணியில் நின்றாலும் வெல்பவர்கள் யாராக இருந்தாலும் மக்கள் எப்போதும் தோற்கடிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உறுதி.

இனவாதத்தில் இருந்து விடுபட்டு, ஒட்டுமொத்த இலங்கை மக்களினதும் நலனை முன்னிறுத்தி சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அல்லது அமைப்பு ஒன்றை இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகள் உருவாக்க வேண்டும். இது அண்மைக் காலத்தில் சாத்தியமாகப்படாத போதும் கடந்த 58 ஆண்டுகால இலங்கை வரலாறு அதையே எமக்கு நிரூபிக்கிறது. இனவாதமும் பிரிவினையும் 65,000க்கும் மேற்பட்ட உயிரழிவுகளையே ஏற்படுத்தி உள்ளது. இலங்கையில் உள்ள எந்த இன மக்களும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவில்லை. அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்கள் செலவில் ஆடம்பரமாக வாழ வாக்களித்த மக்களும் அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத மக்களும் நாளாந்தம் வெவ்வேறு முனைகளில் போராட வேண்டி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Metropolitan Police Service Wants Your Assistance to Help Stop the Violence. Please Phone the Confidential Tamil Hotline.**





## கனடாவில் இரு மாதங்களில்

# நால்வர் கொலை

கனடாவில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் ஓகஸ்ட் செப்ரம்பர் மாதங்களில் நால்வர் கொலை செய்யப்பட்டு உள்ளனர். யூலை 31ல் கார்ப்பாக்கில் வைத்து உமாதேவன் தியாகராஜா என்ற இளைஞர் கறுப்பினக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தமக்கு வழிவிடும்படி கேட்டதற்காக அவர் கொல்லப்பட்டு உள்ளார்.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சந்திரகுமார் நகுலசிகாமணி (21), சௌமியன் நகுலசிகாமணி (19) என்ற இரு சகோதரர்கள் செப்ரம்பர் 23ல் காரினால் அடித்துக் கொல்லப்பட்டனர். ஒரு பெண் தொடர்பான பிரச்சினையே இம்மாணவர்களின் கொலைக்குக் காரணம் எனத் தெரியவருகிறது. ஏற்கனவே இது தொடர்பில் சச்சரவுகள் ஏற்பட்டும் உள்ளது. சம்பந்தப்பட்ட ஒருவர் சரணடைந்துள்ளார்.

புங்குடுதீவைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞர் ஓகஸ்டில் காரினால் அடித்துக் கொல்லப்பட்டார். ஆனால் இச்சம்பவம் ஊடகங்களின் கவனத்தை எடுத்திருக்கவில்லை. இம்மூன்று கொலைகளுக்குமான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

## இல்பேர்ட் கொலை சந்தேக நபரை அடையாளம் காட்டுபவர்களுக்கு £10,000 சன்மானம்



இல்பேர்ட்டில் படுகொலை செய்யப்பட்ட வல்வெட்டியைச் சேர்ந்த பிரபாகரன் கிருஷ்ணசாமியின் (22) கொலை தொடர்பாக பொலிசார் தீபன் என்று அழைக்கப்படும் சிறிநவதீபன் சிறிரங்கராஜா (24) (மேல்) என்பவரை தேடுகின்றனர். தீபனை கைது செய்ய உதவுபவர்களுக்கு £10,000 சன்மானம் வழங்கப்படும் எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். தகவல் கொடுக்க விரும்புபவர்கள் 020 7230 2061 என்ற இலக்கத்திற்கோ அல்லது க்ரைம் ஸ்ரொப்பேர்ஸ் 0800 555 111 இலக்கத்திற்கோ அழைக்கவும். தமிழில் தகவலை வழங்க விரும்புபவர்கள் 0800 587 2935 என்ற ரமிழ் ஹொட்லைனுக்கு அழைக்கவும்.

பிரபாகரன் யூன் 25 நடுஇரவில் குத்திக் கொலை செய்யப்பட்டார். வடமராட்சி வல்வெட்டி பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் சம்பவதினத்தன்று இல்பேர்ட் லேன், இல்பேர்டில் உள்ள ஷெல் பெற்றோல் நிலைத்தின் போர்க்கோட்டில் வைத்து குத்தப்பட்டுள்ளார். ஒக்ஸ்போர்டில் உள்ள பெற்றோல் ஸ்ரேசனில் பணிபுரிந்த பிரபாகரன், உறவினர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொள்ள லண்டன் வந்திருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.



## சகோதரனின் கொலையாளியை அடையாளம் காட்டுங்கள் : £25000 சன்மானம்



"தம்பியின் படுகொலை நடந்து ஒரு வருடம் ஆகியும் எம்மால் அந்த வேதனையில் இருந்து மீள முடியவில்லை. கொலையாளியை பொலிஸ்க்கு அடையாளம் காட்டுவதன் மூலம் எமது வேதனையை நாம் ஓரளவு தணிக்க முடியும்" எனத் தெரிவித்தார் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 30ல் படுகொலை செய்யப்பட்ட கேதீஸ்வரனின் (29) சகோதரர் சந்திரகுமார் சண்முகநாதன் (32).

சண்முகநாதன் குடும்பத்தினர் முல்லைத்தீவு உயிலங்குளத்தைச் சேர்ந்தவர்கள். சந்திரகுமார் 90க்களின் நடுப்பகுதியில் லண்டனில் அரசியல் தஞ்சம் கோரினார். அவரைத் தொடர்ந்து கேதீஸ்வரன் 1999ல் அரசியல் தஞ்சம் கோரினார். இவர்களுக்கு மற்றுமொரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் இலங்கையில் உள்ளனர். கேதீஸ்வரனுக்கு இலங்கையில் காதலியும் இருந்தார்.

குடும்பப் பொறுப்பான இளைஞர், தனது குடும்பத்தை வாழவைக்க லண்டன் வந்த இளைஞன், தனது காதலியுடன் நல்ல எதிர்காலத்தை நோக்கியிருந்த இளைஞன் அநியாயமாகக் கொல்லப்பட்டு உள்ளார்.

கொலையாளியை அடையாளம் காணவும், கைது செய்யவும், தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் உதவும் வகையில் தகவல் வழங்குபவர்களுக்கு £25,000 சன்மானம் வழங்கப்படும்" என இக்கொலை தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் DI Peter Basnett (SCD) தேசம் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

**Tamil Hotline : 0800 587 2935**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழபதீஸ்வரருக்கு எதிராக அவதாரம் எடுக்கிறார் சிதம்பரநடராஜர்

ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் உரிமையாளர் சீவரத்தினம் முன்பு அக்ரன் கார் ரென்ரல்ஸ் அமைந்திருந்த காணியை £900,000 பவுண்கள் கொடுத்து விலைக்கு வாங்கியுள்ளார். இவ்வருட முற்பகுதியில் சீவரத்தினம் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை அடாவடித்தனமாக கைப்பற்ற எடுக்கப்பட்ட முயற்சி மண் கவ்வியதனை தொடர்ந்து ஈழபதீஸ்வரர் ஆலயத்திற்கு போட்டியாக ஜெயதேவனை எதிர்த்து சிவலிங்கம் ஒன்றை பிரதிஸ்டை பண்ணுவதில் அவர் தீவிரமாக ஈடுபட்டு உள்ளார். வெம்பிளி அல்லது அல்பேட்டன் கடைகளுக்கு பின்புறமாக அமைந்துள்ள சிறிய நிலப்பரப்பில் ஏற்கனவே எரிந்த நிலையில் இருந்த கட்டிடம் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டு 'சிதம்பர நடராஜர்' ஆலயம் என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் அறியத்தருகின்றன.

முன்னரே இருந்த கட்டிடம் மீள கட்டப்படுவதால் இவ்வேலைக்கு பிறென்ற் கவுன்சிலிலிருந்து அனுமதி பெறப்பட வேண்டிய அவசியம் இல்லை. எது எப்படியிருப்பினும் இக்கட்டடத்தின் பாவனை அனுமதி குறித்து காலப்போக்கில் பிரச்சனை வரலாம் என தெரிவிக்கப்படுகின்றது. பணம் சேகரிப்பதற்காக இக்கட்டடம் சிதம்பரநடராஜர் ஆலயம் என பொதுவாக பெயர் சூட்டப்பட்டாலும் அது கலாச்சார நிலையமாகவே லோக்கல்



கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது இப்படியிருக்க இந்த மாதத்துடன் bye! bye!! காட்டப்பட்டு திரு சீவரத்தினம் வெம்பிளியில் உள்ள லண்டன் தமிழ் நிலையத்தின் தலைவர் பதவியில் இருந்து போதிய ஆதரவு இல்லாத காரணத்தினால் ஒதுங்க நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார். அதனால் லண்டன் தமிழ் நிலையத்திற்கு எதிராக தனது புதிய கட்டடத்தில் நடனம், தமிழ், இசை போன்ற வகுப்புக்களை நடத்த இருப்பதாக மேலும் அறியப்படுகின்றது.

சீவரத்தினத்தின் இப்புதிய நடவடிக்கைகளைப் பற்றி லண்டன் தமிழ் நிலையத்தின் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினர் ஒருவரை அபிப்பிராயம் கேட்டபோது "லண்டன் தமிழ் நிலையம் ஒரு பலமான அமைப்பு இங்கு அரசியலுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடமில்லை. இது தமிழரின் பண்பாடான கல்வி, கலையின் ஊற்று. லண்டன் தமிழ் நிலையத்திற்கு எதிராக முன்னர் எத்தனையோ பேர் வேலை செய்தனர். பலர் பிரிந்துபோய் தனியாக பாடசாலைகள் ஆரம்பித்தனர். இவர்களில் பலர் இன்னும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றனர். சண்டை பிடிப்பதும் குழிபறிப்பதும் பாடசாலையில் அரசியல் நடாத்துவதும் எமது குறிக்கோள் இல்லை. இன்று தமிழ் நிலையத்தில் கல்வி கற்ற பிள்ளைகள் தற்போது எமது நிலையத்திலேயே ஆசிரியராக பணிபுரிகின்றனர். இது தான் எமது வெற்றி" எனக் குறிப்பிட்டார்.

## 32வது இலக்கியச் சந்திப்பு பாரிஸ் 2005

புலம்பெயர்ந்து வாழும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்ளும் இலக்கியச் சந்திப்பின் 32வது தொடர் இம்முறை பாரிஸில் நவம்பர் மாதம் 12ம் 13ம் திகதிகளில் வரும் சனி, ஞாயிறு இரு தினங்களும் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் சமூக, பொருளாதார அரசியல், கலை இலக்கியம் சார்ந்த கருத்தாடல்கள் நடைபெறும். இச் சந்திப்பில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்களை கீழுள்ள மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் முகவரியோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்த இலக்கியச் சந்திப்பானது இவ்வருடத்தோடு தனது 17வது ஆண்டை நிறைவு செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

முகவரி : லக்ஷ்மி தமயந்தி
27 rue Jean Moulin
92400 Courbevoie, France.
தொலைபேசி :
0033149978983, 0047 7013 3705
மின்னஞ்சல்: ilak-chanthippu32@hotmail.fr

## போஸ்ட் மாஸ்டர் தற்கொலை

மிச்சம் பகுதியின் உபதபால்நிலைய அதிபர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரது தபால் நிலையம் மோசடி தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து அவர் அண்மையில் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 30 தபால் நிலையங்களில் 12 தமிழர்களினது. செப்ரம்பரில் முடிவடைந்த வழக்கில் ரொற்றனம்ஹேல் லோட்சிப் லேன் உதவித் தபாலதிபர் ராஜரட்ணம் ரமேஸ்வரன் (54) அவரது மனைவி தயாரஞ்சினி ரமேஸ்வரன் (50), சிக்வல் ரோ தபால்நிலைய உதவித் தபாலதிபர் ரட்ணசபாபதி ஜெயச்சந்திரன் (48) ஆகியோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். உதவித் தபால் அதிபர்கள் இருவருக்கும் ஆறு, ஆறு வருடங்கள் தண்டனை அழிக்கப்பட்டு உள்ளது. குற்றவாளியாகக் காணப்பட்ட தயாரஞ்சினிக்கு இடைநிறுத் தப்பட்ட தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இவர்கள் ஒரு மில்லியன் பவுண் வரை மோசடியில் ஈடுபட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேலையை வரிந்துகட்டி களமிறங்குகிறார் சட்டத்தரணி காயத்திரி

# இழுபறியில் ஈலிங் அம்பாள்

ஈலிங்கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர்கள் 25 செப் மேற்கொள்ளப்பட்ட மத்தியஸ்தத்தை தூக்கி எறிந்துள்ளதாக அவர்களில் சிலரை பிரதிநிதித்துவப்படுத்தும் நாதன், சுரேஸ் அன்ட் அமிர்தன் சட்டநிறுவனத்தை சேர்ந்த காயத்திரி கதிர்காமநாதன் அறிவித்து உள்ளார்.

கவுன்சிலர் போல் சத்தியநேசன், தமிழ் அமைப்புகளின் தலைவர் சிதம்பரப்பிள்ளை, லூசியம் சிவன் கோவில் சச்சிதானந்தன், சிவக்குமார் ஆகிய நால்வரைக் கொண்ட மத்தியஸ்தக் குழு "1. சென்ற டிசம்பருக்கு முன் சந்தா செலுத்தியவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும். 2. வேட்புமனுக்கள் மீளப் புதிதாக தாக்கல் செய்யப்பட வேண்டும். 3. தேர்தல் ஆணைக்குழு தமிழரல்லாத சுயாதீன அமைப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டும்" என அறிவுறுத்தி இருதரப்பினரதும் சம்மதத்தைப் பெற்றனர். இதன்போது அறங்காவலர்கள் ஒத்துழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

தற்போது அறங்காவலரும் சட்டத்தரணி யுமான காயத்திரி இம்மத்தியஸ்தத்தை நிராகரிப்பதாக அறிவித்து உள்ளார். சிதம்பரப்பிள்ளையின் மத்தியஸ்தத்தை கேள்விக்கு உள்ளாக்கியும் உள்ளார். ஏற்கனவே மத்தியஸ்த நாளில் இவர் தொடர்பான கேள்வி எழுப்பப்பட்டு இரு தரப்பும் அவரது மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கவுன்சிலர் போல் சத்தியநேசனதும் மத்தியஸ்தத்தையும் காயத்திரி நிராகரிக்கித்துள்ளார்.



சர்ச்சைக்குரிய மத்தியஸ்தர் சிதம்பரப்பிள்ளை

சட்டத்தரணி காயத்திரி ஆலயத்தின் சட்டப்பிரதிநிதி. கடந்த தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வியடைந்தவர். தற்போது அறங்காவலர்களில் ஒரு பிரிவினரை பிரதிநிதித் துவப்படுத்துகிறார். இதன் மூலம் தனது கட்சிக்காரர் நலனிலேயே அக்கறையுடையவராகிறார். இது ஆலயத்தின் நலனுடன் முரண்படுவதாக உள்ளது. இவ்வழக்கு சுமூகமாகத் தீர்க்கப்படாவிட்டால் பல்லாயிரக்கணக்கான பவுண்கள் பொதுப்பணம் விரயமாகுமென நீதிபதி ஓகஸ்ட் 16 வழக்கில் தெரிவித்தார். சுமூகமாகத் தீர்த்து அப்பணத்தை சுனாமி நிவரணத்துக்கு வழங்குமாறு நீதிபதி கேட்டிருந்தார்.

ஆலயத்தில் ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையை சுமூகமாகத்த தீர்த்து ஆலயத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டிய அறங்காவலர்களும் ஆலயத்தின் சட்டப்பிரதிநிதியும் மத்தியஸ்தத்தை தூக்கி எறிந்ததன் மூலம் நெய்யூற்றி பிரச்சினையை மேலும் எரியவிட்டுள்ளனர். ஆலயத்தின் நலனிற்கு முரணான இவர்களின் இந்த செயற்பாடு நீதிபதி குறிப்பிட்டது போல் சட்டத்தரணிகள் சம்பாதிப்பதற்கே வழிவகுப்பதாக உள்ளது.

**தேசம் உங்கள் இல்லம் தேடி வர, நீங்களும் சந்தா தாரர் ஆகுங்கள்.**

## 14 வயதுச் சிறுவனைக் காணவில்லை

செப்ரம்பர் 29 முதல் கஜந்தன் அண்ணாத்துரை என்ற 14 வயதுச் சிறுவனைக் காணவில்லை. இவ்வாண்டு ஏப்ரல் அளவில் பிரித்தானியாவில் தஞ்சம் கோரிய இச்சிறுவன் சவுத்தோலில் தனது மாமன் மாமியுடன் வசித்து வந்தார். சம்பவ தினம் தனது மைத்துனியை சவுத்தோல் நோத் பிறைமறி ஸ்கூலில் விட்டுவரச் சென்றபோதே இவர் காணாமற் போனார்.



பொலிசார் இவரை '5'2" tall, of thin build, with brown eyes' என்று விவரிக்கின்றனர். இவர் 8 - 9 வயதுக்குரியவர்களின் ஆடைகளை அணிகிறார். அவ்வளவுக்கு சிறிய தோற்றம் உடையவர். கஜந்தன் பற்றி பொலிசார் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர். தகவல் தெரிந்தவர்கள் Incident Room at Hendon on 020 8358 0200 க்கு அழைக்கவும்.

இச்செய்தி ஒக்ரோபர் 17 பதிப்புக்குச் செல்லும் வரை கஜந்தனின் இருப்பிடம் பற்றிய விபரங்கள் தெரியவரவில்லை. கஜந்தனின் மறைவு தொடர்ந்தும் மர்மமாகவே உள்ளது. அவரது பெற்றோர் இன்னமும் இலங்கையிலேயே உள்ளனர். இவரது தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டும் உள்ளது. பொலிசார் வெவ்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜி

## பெண்கள் (மட்டும்) சந்திப்பு:
# மாற்றங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்

ஒக்ரோபர் 15, 16 இரு தினங்களும் லண்டனில் 24வது பெண்கள் சந்திப்பு நடந்தது. இலங்கையிலிருந்து தேவகௌரி, வாசுகி இந்தியாவில் இருந்து திலகபாமா, கனடாவில் இருந்து சுமதி, சுவிஸில் இருந்து றஞ்சி, பிரான்ஸில் இருந்து இன்பவல்லி மற்றும் சிலரும் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு ராஜேஸ்பாலா தலைமை தாங்கினார். இச்சந்திப்பு விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானதில் பெரும்பாலான பெண்கள் நிகழ்வில் இருந்து அந்நியப்பட்டு நின்றனர். சிலர் வெளியேறினர். சிலர் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஆண்கள் யாரும் அனுமதிக்கப்படாத இச்சந்திப்பு பல சலசலப்பை ஏற்படுத்தியது. இப்பெண்கள் சந்திப்பு பெண்விடுதலை பற்றிய கருத்தையும் தெளிவையும் அடைவதற்கான ஒரு களமாக இருக்கும் என்பதே என் போன்ற பலரின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதனால் ஆண்கள் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்ற கேள்வியை எழுப்பியவாறும் பெண்கள் சந்திப்பின் சாதிப்பு என்ன என்றவாறும் இரு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் அவை பற்றி நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் எந்த அக்கறையையும் கொள்ளவில்லை. மாறாக "எந்த எளிய சாதி இதை அடித்தது?", "எந்தக் கம்மனாட்டி இதை அடித்தது" என்றும் வசை பாடினார்களே ஒழிய அவை என்ன சொல்கின்றன என்று பார்க்க மறுத்தார்கள்.

சுனாமி வந்து பத்து மாதங்கள் கடந்து விட்ட நிலையில் எல்லோருக்கும் தெரிந்த விடயங்களை மறுபடியும் பேசினார்கள். தென்கிழக்காசியப் பெண்கள் பற்றியும் உலகமயமாக்கல் பெண்களை அடிமை கொள்கின்றது பற்றியும் பெண்கள் மீதான ஒடுக்குமுறை உலகம் முழுவதும் ஒரே மாதிரியாய் தான் உள்ளது என்றும் அங்கு பேசப்பட்டது.

பெண்களின் உடல், உள நலம் பற்றிய பேச்சானது அங்கு கூடியிருந்த பெண்களுக்கு உலகமயமாக்கல் ஆணாதிக்கம் பற்றித் தெரிந்திருந்த பெண்களுக்கு புதிதாக எதையும் சொல்லியிருக்க முடியாது. உண்மையில் அந்தத் தலைப்பு சாதாரண மட்டத்துப் பெண்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்திருக்கும்.

அத்தலைப்பின் மீதான கேள்வி நேரத்தின் போது தமிழ் கலாச்சாரம் பண்பாடு பற்றிய விஷயத்தில் விவாதம் தொடங்கியது. தமிழ் கலாச்சாரம் பெண்களை அடிமைப் படுத்துவதாக சிலர் தெரிவித்தனர். கலாச்சாரத்தின் மூலம் அடிமைத்தனம் உருவாகின்றது என்பது இந்த ஆண்களுக்கோ பெண்களுக்கோ எவ்வளவு தூரம் தெரியும் எனக் கேட்ட போது தாங்கள் புத்தகங்களிலும் இணையத்தி லும் எழுதுகின்றோம் தானே என பதில் அளித்தனர். யாருக்கு, எங்கே, எப்படி எழுதுகின்றீர்கள் எனக்கேட்ட போது இதை தனியாக வைத்துக் கொள்ளலாம் என அடக்கிவிட்டார்கள்.

இச்சந்திப்பின் ஏற்பாட்டாளர்களாக வந்திருந்த சில பெண்கள் தான் தொடர்ந்தும் பேசிக்கொண்டிருந்தார்கள். விவாதம் செய்து கொண்டே இருந்தார்கள். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஏனைய பெண்கள் தமது கருத்துக்களை முன் வைக்க முற்பட்ட போதெல்லாம் குறுக்கீடு செய்து கூச்சலிட்டு கருத்துக்களை இருட்டடிப்புச் செய்தனர்.

மற்றயவர்களுடைய கருத்துக்களை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதும் அதனூடாக கருத்தியல் ரீதியாக வென்றெடுப்பதும் தான் நாகரீகம். குறுக்கிட்டு, கூச்சலிட்டு கருத்துச் சொல்லும் உரிமையை மறுப்பது அராஜகம். எல்லாப் பெண்களது சிந்தனையையும் ஒரு கும்பலாக குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் போல் சிலருக்காகப் பெண்கள் சந்திப்பு நடத்துவதானால் தயவு செய்து எல்லாப் பெண்களுக்கும் அழைப்பு விடாதீர்கள். கணவனிடமும் தந்தையிடமும் மகனிடமும் கருத்துச் சொல்லவும் விவாதிக்கவும் இருக்கும் உரிமை பெண்கள் சந்திப்பில் வழங்கப்படவில்லை என்பது தான் உண்மை.

மேலும் பாலியல் பற்றிய பேச்சுக்கள் தான் இப் பெண்களிடம் அதிகளவில் இடம்பெற்றது. பெண்களுக்கு சமூக பொருளாதாரரீதியில் கலாச்சார பண்பாட்டு ரீதியில் சிக்கல்கள் உள்ளன. இவற்றிற்கான தீர்வும் வழிகளும் முயற்சிக்கப்படும் நிலையை நோக்கிப் போகாமல் எடுத்த எடுப்பில் பாலியல் பற்றிய இந்தப் பெண்களின் விவாதம் அவர்களைப் புறம்தள்ளிவிடும்.

Tennisம் sexம் lesbian marriagesம் வசதி படைத்த உயர்வர்க்க பெண்களால் கலந்துரையாடப்படும் விடயங்கள். அதேசமயம் சராசரிப் பெண்கள் தனது தேவைகளுக்காக போராடிக்கொண்டுள்ளாள். உண்மையான பிரச்சினைகளை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய தருணத்தில், பாலியல் விடயங்களைப் பெரிதுபடுத்தி காலத்தை வீணடிக்கிறார்கள். கைகளை அழுக்காக்கும் உண்மைப் பிரச்சினைகளில் தம்மை ஈடுபடுத்தத் தயாரில்லாத சோம்பேறித்தனமான புத்திஜீவிகள் தான் இப்படித் தங்களைக் குழப்புகிறார்கள்.

எமது சமூகம் தனக்கென்று ஒரு கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் என்பவற்றைக் கொண்டது. சமூகத்திற்கு வெளியே நின்றுகொண்டு சமூகத்தை மாற்றமுடியாது. சமூகத்தோடு வாழ்ந்துகொண்டு தான் சமூகம் பற்றிப் பேச முடியும். இல்லையென்றால் விவாகரத்துக்களும், மனக் குமுறல்களும் நிர்க்கதியும் தற்கொலைகளும் தான் மிஞ்சும்.

பெண்கள் சந்திப்பு எந்தப் பெண்களுக்காக? சிறு பிள்ளையிடம் நெருப்பைக் கொடுத்தால் அது எப்படி தன்னையும் தான் சார்ந்தவர்களையும் அழிக்குமோ அப்படிச் சில பெண்களும் கருத்தெனும் நெருப்போடு அலைகிறார்கள். வன்முறைத்தனமாகவும் பொருத்தமற்ற சூழலிலும் தம்மை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் எங்கோ இருக்கிறார்கள். சமூகம் எங்கோ இருக்கின்றது. இந்தப் பெண்கள் சந்திப்பிற்கு மாற்றங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டக்காரர்கள் அணி மாறினர்! நீதிமன்றில் TCHA



த ஜெயபாலன்

Tamil Community Housing Association (TCHA) - தமிழ் சமூக வீட்டுவசதிக் கழகத்தினால் பராமரிக்கப்படும் பல குடியிருப்புகளில், கிழக்கு லண்டன் மனோபார்க் நெவில் வீதியில் உள்ள Support Housing குடியிருப்புத் தொகுதியும் ஒன்று. இங்கு உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட, மொழி மற்றும் நிர்வாக உதவி தேவைப்படுபவர்கள் குடி இருத்தப்பட்டு உள்ளனர். சில தொகுதிகள் வெற்றிடமாக உள்ளது. சில தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தேவைகள் குறித்த நேரத்தில் செய்யப்படுவதில்லை. கேட்கும் போதெல்லாம் நேரம் இல்லை என்ற பதிலே வரும். ஆனால்....

ஒக்ரோபர் 10ல் ஸ்ரட்போர்ட் தொழில் மன்றத்துக்கு TCHA இக்கு எதிரான 5வது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. TCHA இன் இயக்குநர் ஆர் ஜெயதேவன் தன்னை வேலை நீக்கம் செய்தது அநீதியானது என வழக்குத் தொடுத்துள்ளார். (படம் : ஜெயதேவனும் அவரது சட்ட ஆலோசகர் டேவ் சமறுவும்) இவ்வழக்கில் பல நூற்றுக்கணக்கான அவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. அதை விட ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட கடிதங்கள் பரிமாறப்பட்டதாக வழக்கு மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும் இவ்வழக்கின் போது காடைத்தனம், நிர்வாகத்துக்குத் தடையான நெருக்கமான ஆண் - பெண் உறவுகள், திறமையற்ற நிர்வாகம் என்பன வெளிவந்தது.



இவ்வழக்கில், வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆர் ஜெயதேவனும் வேலை நீக்கம் செய்த TCHA இன் தலைவர் என் ராம்ராஜ்ம் நெருங்கிய நண்பர்கள். என் ராம்ராஜ் 2000ல் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின் ஆர் ஜெயதேவன் 2001ல் இயக்குநராகப் பதவியேற்றார். இவர்களுடைய உறவு சில ஆண்டுகள் நீடித்தது. இக்காலப்பகுதியில் இவர்கள் இருவரையும் தூக்கி எறிய TCHA இன் பங்குதாரர்கள் சிலர் தீவிரமாக முயன்றனர்.

TCHAயோடு ஈடுபட்டு இருந்தவர்கள்: பங்குதாரர்கள், முகாமைத்துவக் குழு, பணியாளர்கள் பெரும்பாலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக தங்களைக் காட்டிக்கொண்டவர்கள். ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். தனிப்பட்டவர்களுக்கிடையேயான முரண்பாடுகள் குழு வாதமாகவும் பழிவாங்கல்களாகவும் ஆகி தமிழ் பொது அமைப்புகளில் TCHA ஒரு மோசமான நிர்வாகத்தைக் கொண்ட அமைப்பாக உள்ளது. ராம்ராஜ் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின் தொழில் மன்றத்துக்கு வரும் 5வது வழக்கு இதுவாகும். இதில் வழக்குச் செலவாகவும் நட்ட ஈடாகவும் பல்லாயிரம் பவுண்களைTCHA செலுத்தியுள்ளது.

TCHA இல் இடம்பெற்ற குழுவாதம் லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகளுக்கிடையேயான பிளவாகியது. அப்பிளவில் ஜெயதேவன் ராம்ராஜ் ஓரணியிலும் டொக்டர் சபாரட்ணம் - நவநாயகம் போன்ற பங்குதாரர்கள் சிலர் ஓரணியிலும் நின்றனர்.

TCHA இன் அலுவலர் ஐயாத்துரை குளோரியாவுக்கும் அதன் தலைவர் ராம்ராஜ்க்கும் ஏற்பட்ட நெருக்கமான உறவே தான் வேலை நிக்கப்படக் காரணம் என ஜெயதேவன் தரப்பில் வாதிடப்பட்டது. குளோரியா, தலைவர் ராம்ராஜ் உடன் தனக்கு இருந்த உறவைப் பயன்படுத்தி தனது நிர்வாகத்தை மதிப்பிழக்கச் செய்ய முற்பட்டதாக ஜெயதேவன் தரப்பில் குற்றம்சாட்டப் பட்டது. ஜெயதேவன், குளோரியா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முற் பட்டபோது ராம்ராஜ் தலையிட்டு செய்ய முயன்ற போதே ராம்ராஜ் - ஜெயதேவன் உறவு முறிந்தது. ஆட்டக்காரர்களின் அணிச் சேர்க்கை மாறியது. ராம்ராஜ் தனது முன்னாள் எதிரிகளான டொக்டர் சபாரட்ணம் - நவநாயகம் அணியில் போய் சேர்ந்தார். அவர்களும் வாரி அணைத்தனர். அவர்களுக்கு இப்பிளவு ஒரு அதிஸ்டம். ராம்ராஜ்யை வைத்து ஜெயதேவனை கலைத்தால் பின்னர் ராம்ராஜ்ஜை சத்தம் சந்தடியில்லாமல் அனுப்பலாம் என்கிறது அந்தக் கணக்கு.

ஏப்ரல் 12 2004ல் என் ராம்ராஜ் தன்னிச்சையாக ஆர் ஜெயதேவனை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்தார். இதனை அடுத்து முகாமைத்துவக்குழுவில் பிளவு ஏற்பட்டது. ஜெயதேவனுக்கு ஆதரவாக காலம் சென்ற எஸ் கனகேந்திரம் உட்பட மூவரும் என் ராம்ராஜ்க்கு ஐவரும் ஆதரவளித்தனர். உபதலைவர் எஸ் கனகேந்திரம் தலைமையில் இடம்பெற்ற முகாமைத்துவக் கூட்டத்தில் ஜெயதேவன் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையில் யூன் 2 2004ல் ஆர் ஜெயதேவன் வோல்தம்ஸ்ரோவில் உள்ள TCHA அலுவலகத்துக்குச் சென்றார். அங்கே ஜெயதேவன் தாக்கப்பட்டு அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டதாக மன்றத்தில் ஜெயதேவன் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் 25 2004ல் இலங்கை சென்ற ஆர் ஜெயதேவன் விடுதலைப் புலிகளால் 62 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானார். தன்னை தடுத்து வைக்குமாறு கேட்டவர்களில் TCHA இன் பங்குதாரர்களும் முகாமை யாளர்களும் அடங்குவதாக ஆர் ஜெயதேவன் குற்றம்சாட்டு கிறார். வன்னியில் தடுத்து வைக்கப்படும் வரை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு முகாமில் இருந்த ஜெயதேவன் தற்போது தீவிர புலி எதிர்ப்பு முகாமில் நிற்கிறார்.

## TCHA இன் வாதமும் குறுக்கு விசாரணையும்

ஒக்ரோபர் 13 வரை நான்கு தினங்கள் இடம்பெற்ற வழக்கில் ஜெயதேவனை வேலை நீக்கியது தொடர்பாக TCHA சார்பில் அவர்களுடைய பக்கத்து நியாயங்களை தொழில் மன்றம் கேட்டது. TCHA சார்பில் ரொனி சோர்ஸ் (Independent Consultant - mainly with Black & Ethnic Minority Housing Association), ஜோர்ச் வருகீஸ் (Consultant (PPCR Ltd), Senior Manager in local authorities), லொக்காட் மெடொப் (Independent Housing Consultant) குறிப்பாக ராம்ராஜ் ஆகியோர் சட்சியமளித்தனர்.

ஒப்பந்தக்காரர்களை தவறாகப் பயன்படுத்தியது, இயக்குநராக இருந்து கொண்டு தனது சொந்த நிறுவனத்துடன் வர்த்தகம் செய்தது, சில பணியாளர்களுடன் பாரபட்சமாக நடந்து கொண்டது, நிதி கையாளும் விதிமுறைகளை மீறியது, TCHAன் நிர்வாக மற்றும் வளங்களை தனது சொந்த நோக்கங்களுக்கு பயன்படுத்தியது என தனது குற்றச்சாட்டுகளை ராம்ரா அடுக்கியிருந்தார்.

ரொனி சோர்ஸ், ஜோர்ஜ் வருகீஸ், லொக்காட் மேடொப் போன்ற நிபுணர்களின் விசாரணைகள், ஆலோசனைகளின் பின் ராம்ராஜ் ஜெயதேவனை நிரந்தரமாக வேலை நீக்கினார்.

ரொனி சோர்ஸ், ஜோர்ஜ் வருகீஸ், லொக்காட் மேடொப் ஆகியோர் ஒருவரை ஒருவர் ஏற்கனவே அறிந்தவர்கள் என்றும் அவர்களது விசாரணைகள் ஆலோசனைகள் சுயாதீனமானது அல்ல என்றும் ஜெயதேவன் தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் ராம்ராஜ்க்கு எதிராக ஜெயதேவன் வைத்த குற்றச்சாட்டுகள் முறைப்படி விசாரிக்கப்படவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டது. இந்நிலையில் ஜெயதேவன் மீதான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்ட போது ராம்ராஜன் தலையீடு காணப்பட்டதாக ஜெயதேவன் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டது.

லொக்காட் மெடொப் சாட்சியமளிக்கையில் ஜெயதேவன் தனது சொந்த நிறுவனமான Ivar Recycling உடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மட்டுமே அவரை வேலை நீக்கப் போதுமானது எனத் தெரிவித்தார் ஆனால் ஒப்பந்தக்காரர்களை பயன்படுத்துவது பற்றிய விதிமுறைகள் ஜெயதேவன் பதவியேற்ற காலப்பகுதியில் காணப்படவில்லை என்றும் இவ்வொப்பந்தம் TCHAன் தலைவர் ராம்ராஜ்க்கு தெரிந்திருந்ததாகவும் ஜெயதேவன் தரப்பில் வாதிடப்பட்டது.

ஜோர்ஜ் வருகீஸ் சாட்சியமளிக்கையில் குளொரியாவின் கோவையை (பைலை) ஜெயதேவன் வீட்டுக்கு கொண்டு சென்றது நம்பகத்தன்மையை பாதிப்பதாகத் தெரிவித்தார். ஆனால் இயக்குநருக்கு அவரது பணியாளர்களின் கோவையை பார்வையிட அனுமதி இருப்பதாலும் இயக்குநர் கோவைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்று பார்வையிடுவது வழக்கமாக இருப்பதாலும் எந்த நம்பகத்தன்மையும் மீறப்படவில்லை என ஜெயதேவன் தரப்பில் வாதிடப்பட்டது.

ரொனி சோர்ஸ் சாட்சியமளிக்கையில் ஜெயதேவன் காலத்தில் TCHA பதிவு செய்யப்பட்டதை ஏற்றுக் கொண்டதுடன் ஜெயதேவனது செயலூக்கத்தை ஒத்துக்கொண்டார். குறுக்கு விசாரணையில் ஜெயதேவனுக்கு வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்று ரொனி சோர்ஸ் இடம் கேட்டபோது அவர் தட்டுத் தடுமாறினார். மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த ரொனி சோர்ஸ் TCHAன் முகாமைத்துவம் பலவீனமானது என்பதை ஏற்றுக் கொண்டார்.



இவ் விசாரணையில் ராம்ராஜ் (படம்) 4 மணிநேரம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஜெயதேவன் தரப்பில் சட்டப்பிரதிநிதி டேவ் சமாரு முக்கிய விடயங்களை அணுகவில்லையென மன்றத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார். ராம்ராஜ் தனது சாட்சி யத்தில் குளோரியாவுக்கும் தனக்கும் இடையில் எந்த அந்தரங்கமான உறவுகளும் இல்லை என்றும் மற்றைய பணியாளர்களுடன் பழகுவது போலவே குயொரியாவுடன் பழகுவதாகவும் தெரிவித்தார்.

வழக்கு மீண்டும் பெப்ரவரி 6ல் நடைபெறவுள்ளது. மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் போது ஜெயதேவன் தரப்பு வாதங்களை மன்றம் செவிமடுக்கும். தனது சாட்சியத்துக்கு 4 மணிநேரம் கேட்ட ஜெயதேவனுக்கு 2:30 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டு உள்ளது. அப்போது யூன் 2 2004ல் ஜெயதேவன் தாக்கப்பட்டது, ராம்ராஜ் - குளோரியாவுக்கு இடையேயான உறவுகள் என்பன மேலும் விரிவாக விவாதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜெயதேவன் சார்பில் மூவர் சாட்சியமளிக்கின்றனர். ❑

**இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெறுவதற்கு நீங்களும் சந்தாதாரர் ஆகுங்கள்.**

**தொடர்புகளுக்கு :**

Thesam, P O Box 35806
E11 3JX, London, UK
Tel : 0208 279 0354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரைக் கதை, வசனம், இயக்கம்: தமிழகத் திரையுலகின் தம்பட்டம்

## அன்புள்ள தங்கர்பச்சான் அவர்களுக்கு

உங்களது அகில உலக ரசிகனின் இனிய கைகூப்பு (வணக்கம்). "பாரதி"யில் உங்கள் ஒளியோவியத்தையும், "அழகி"யில் உங்களது இயக்கத்தையும் கண்டு ஆனந்தப்பட்ட ரசிகர்களில் நானும் ஒருவன். (உங்கள் அழகியின் உல்டா தான் "ஆட்டோ·்கிராப்" என பேசிக்கொள்றாங்கோ. உண்மை தானா?)

சமீபத்தில் எனது அமெரிக்க நண்பன் தனக்குப் பிடித்த புத்தகங்களில் சிலவற்றைத் தெரிவுசெய்து அனுப்பி இருப்பதாகவும், வாசிக்கும்படியும் கூறினான். (அகஸ்டோ ருவா பஸ்டோஸ், ஜான் லீ ஆன்டர்சன், மாம்மே பராடர்சன், ஸ்டெபான் ஸ்வெய்க்... அண்ணாச்சி, இப்படி இங்கிலீசில நாலு பேரைச் சொன்னா தான் மதிக்கிறானுங்க. அது மட்டுமா "அறிவுஜீவி"னு சொல்லிட்டு திரியிரவனுங்களும் இப்படித்தானே நம்மளை மிரட்டுறானுங்க. ஆனாலும் பாருங்க அண்ணாச்சி, நமக்கு இங்கிலீஸ் வராதுன்னு தெரிஞ்சுதான் இவ்வளவு புத்தகங்களும் தமிழில் மொழி பெயர்த்து வெளிவந்திருக்கிறதுங்கோ.)

இதுல தனக்கு மிகவும் பிடித்த ஸ்டெபான் ஸ்வெக் Stefen Zweig இனுடைய "யாரோ ஒருத்தியின் கடிதம்" (Letter from an unknown woman) குறுநாவலின் கதையை கதைக்கத் தொடங்கிவிட்டான். ஒவ்வொரு பந்தியையும் ரசிச்சு விவரித்து வந்தவனை நிறுத்தச் சொன்னேன். எனக்கு "சுரீர்" என்று உங்கள் "தென்றல்" படம் ஞாபகத்துக்கு வந்தது.




உடனே அவனுக்குச் சொன்னேன், மச்சான், இது என்னுடைய ஆஸ்தான நெறியாளர் தங்கர்பச்சானின் "தென்றல்" படத்தை கள்ள DVDயில் பார்த்த யாரோ ஒரு தமிழன் தனது இங்கிலீஸ்கார நண்பனுக்கு கதையைச் சொல்ல, அவன் இந்தக் கதையை (குறுநாவல்) எழுதிட்டான் போல. மேலும், எங்கே தமிழ்ப்பட கதையை போல இருக்குனு யாரும் சொல்லக்கூடாது என நாவலில் சின்னச்சின்ன (வெளிநாட்டு சூழலுக்கு) மாற்றங்களை செய்திருக்கிறான் என்றதுடன், இந்த எழுத்தாளனையும், அவனுக்கு துணைபோன தமிழனையும் கண்டுபிடித்து சும்மாவிடப்போவதில்லை என்று கர்ஜித்தேன்.

எனது நண்பனும் பதிலுக்கு போனுல கத்த ஆரம்பிச்சிட்டான். மச்சான், இந்த கதையை எழுதிய ஸ்டெபான் ஸ்வெக் 1942இல் பெப்ரவரி 22ம் திகதி தனது இரண்டாவது மனைவியுடன் தற்கொலை செய்துகொண்டார். மற்றும் இந்தக் கதை 1933இலேயே, உனது நெறியாளர் தங்கர்பச்சான் பிறப்பதற்கு முதலே எழுதிவிட்டார் என்றான். மேலும் நான் உரையாடலைத் தொடர விரும்பாமல் தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தேன்.

இரு வாரங்களுக்குப் பின் நண்பன் அனுப்பிய "பொ(பு)த்தகங்கள்" கிடைத்தன. நான் உடனடியாக "யாரோ ஒருத்தியின் கடிதம்" குறுநாவலை வாசிக்க அரம்பித்தேன். நெறியாளரே. கோபப்படக் கூடாது. எப்படி உங்களால் நாவலை காட்சி காட்சியாக (scene by scene) சுருட்ட முடிந்தது?

"நெறியாளரே, உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ? இல்லையோ? "யாரோ ஒருத்தியின் கடிதம்" குறுநாவல் இப்படித் தொடங்குகின்றது.

> ஸ்டெபான் ஸ்வெக் இனுடைய Letter from an unknown woman என்ற குறுநாவல் அறுபதுகளில் ஈழத்து எழுத்தாளர் செ கணேசலிங்கத்தினால் "ஒரு அபலையின் கடிதம்" என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் இரண்டாவது பதிப்பு 2003ல் வெளியிடப்பட்டது. பிற்காலத்தில் 2001ல் இந்நாவல் "யாரோ ஒருத்தியின் கடிதம்" என்ற பெயரில் பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஆங்கிலப் பேராசிரியர் டொக்டர் பி ராஜ்ஜா என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

ஒரு எழுத்தாளர் தனக்கு வந்த வித்தியாசமான கடிதத்தை வாசிக்கிறார். அதில் ஒருபெண் தான் சிறுமியாக (13 வயது) இருந்தபோது, தனது அயல்வீட்டில் வசித்த எழுத்தாளரின் குணாம்சம், செய்கைகள், திறமைகள், அவரது எழுத்துக்கள் என்பவற்றால் அவரின்பால் ஈர்க்கப்பட்டு அவர் அறியாமலேயே அவரின்பால் ஒன்றித்து அன்பும் அக்கறையும் செலுத்துகிறாள். (நாவலாசிரியர் ஸ்டெபான் ஸ்வெக். சிக்மண்ட் ·்பிராய்டின் சீடர் ஆதலால் சிறுமி எழுத்தாளரை நேசிக்கும் சூழலை உளவியல் ரீதியாக விளக்கியுள்ளார்)

பின்னர், சந்தர்ப்ப சூழலில், தனது விதவைத் தாயுடனும், செல்வந்த வளர்ப்புத் தந்தையுடனும் வேறு இடத்திற்கு இடம்பெயர்கிறாள். ஆனாலும் அவளால் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனின் நினைவுகளை மறக்க முடியவில்லை. பின் அவள் இளம் யுவதியாகிய பின்னர், தனது செல்வந்த வாழ்க்கைக்கான வாய்ப்பை புறக்கணித்து, எழுத்தாளரைத் தேடி மீண்டும் தனது பழைய இடத்திற்கு வருகிறாள். ஆடை தொழிற்சாலையில் வேலைக்குச் சேர்கிறாள். ஒரு சூழலில் எழுத்தாளரை சந்திக்கிறாள். அன்றைய இரவில் அவருடன் படுக்கை அறையை பகிர்ந்துகொள்கிறாள்.

எழுத்தாளர் தன்னுடன் உறவுகொள்ளும் பல்வேறு பெண்களில் ஒருத்தியாகக் கருதி அவளுக்கு பணத்தை கொடுக்கும்போது தான், தன்னுடன் உறவு கொள்ளும் பல பெண்களில் ஒருத்தியாகவே தான் தன்னையும் எழுத்தாளர் கருதியுள்ளார் என்பதை புரிந்துகொண்டு தனது காதலை வெளிப்படுத்தாமல் அங்கிருந்து வெளியேறுகிறாள்.

பின்னர், எழுத்தாளர் சிலகாலம் வெளிநாடு சென்றவுடன் இவள் அவரின் நினைவாக அவரின் வாரிசைச் சுமக்கிறாள். எழுத்தாளரின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அவருக்கு பிடித்த வெள்ளை ரோஜாப் பூக்களை பரிசாக அனுப்பி வைக்கிறாள். பின்னர் பல தடவைகள் அவரைச் சந்தித்த போதும் தன்னை அடையாளம் காண முடியாத எழுத்தாளரிடம் தனது காதலைக் கூற விரும்பவில்லை. வறுமையின் காரணமாகவும், மகனை வளர்க்கவும் தனது அழகில் மயங்கிவரும் செல்வந்த ஆண்களுடன் உறவு கொள்கிறாள். அவளை சிலர் மணக்க முன்வந்தபோது, அதனை நிராகரித்து எழுத்தாளரைத் தவிர அவளது உள்ளம் பிறரை ஏற்க மறுக்கிறது.

சளிக் காய்ச்சலில் மகன் இறந்த பிறகு அவனின் பிணத்தின் அருகில் இருந்து இந்தக் கடிதம் எழுதப்படுவதாகக் கூறி கடிதத்தை முடிக்கிறாள். கடிதத்தை வாசித்த எழுத்தாளரின் நீண்ட யோசனையில் பக்கத்து வீட்டு அழகான சிறுமி, தன்னுடன் உறவுகொண்ட அழகிய யுவதி, இப்படி சில உருவங்கள் அவர் நினைவில் தோன்றுகின்றன. இப்படியாக குறுநாவல் முடிவடைகின்றது.

இனி "உங்களின்" கதையில் உருவான தென்றல் திரைப் படத்திற்கு வருவோம். எழுத்தாளரின் நினைவுகளுடனே வாழ்ந்து இறந்துவிட்ட ஒரு அபலைப் பெண்ணின் (அவள் எழுதிவைத்த குறிப்புப் புத்தகத்திலிருந்து) கல்லறையில் இருந்து படம் தொடங்குகின்றது. தனது அயல்வீட்டில் குடியிருக்கும் எழுத்தாளரின் அறிவு, குணம், எழுத்தாற்றல் என்பவற்றினால் ஈர்க்கப்படுகிறாள் பள்ளிக்கூடச் சிறுமி.

பின்னர் தனது விதவைத் தாயார் இறந்துவிட, இடம் பெயர்கிறாள். இருப்பினும் நினைவுகள் எல்லாம் எழுத்தாளர் மீதே இருக்கிறது. தனது வளர்ப்பு வீட்டில் செல்வந்தமான வாழ்க்கை அமைய இருந்தும், அவற்றை புறக்கணித்து வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

இக்காலங்களில் எழுத்தாளர் சிறைப்படுவதும், சிறைப்பட்டவரை சந்திக்க முடியாமலும், இளம் பெண் பயணத்தைத் தொடர்கிறாள். பின்னர் சந்தர்ப்ப சூழலில் எழுத்தாளரைச் சந்திக்கிறாள். தனது அதிதீவிர எழுத்தாளரோ தனது படுக்கை அறையைப் பகிரும் பல பெண்களில்




இவளும் ஒருத்தி எனக் கருதி (தனது தீவிர எழுத்தின் ரசிகை எனத் தெரிந்த பின்னர், "ஆண்டாள்" கதையைச் சொல்லி) படுக்கையை பகிர்ந்து பணம் கொடுத்துப் பிரிகிறார். எழுத்தாளரின் படுக்கைக்கு வரும் பலருள் தானும் ஒருத்தி என எழுத்தாளர் கருதிவிட்டதால் தனது காதலை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறாள் அப்பெண்.

பின் இவள் வறுமையைப் போக்க பஞ்சாலை தொழிற்சாலையில் வேலை செய்கிறாள். எழுத்தாளரின் வாரிசைச் சுமக்கிறாள். எழுத்தாளரின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் மயிலிறகை அனுப்பி வைக்கிறாள்.

வழக்கம் போல தமிழ் சினிமாவின் வணிக சூத்திரத்திற்கு ஏற்ப, கற்பு, தமிழ், பாசப் போராட்டம் என்பன நடந்து, கடைசியில் எழுத்தாளரை நேசித்தவள் இறந்துபோக, தனது வாரிசை (பழநியில் புறப்பட்டு அப்பனுக்கே பாடம் சொன்ன தமிழ்க் கடவுள் (?) முருகனின் புத்திமதியில் திருந்துகிறார் தமிழ் எழுத்தாளர் - புராண கிளைக் கதை) அடையாளம் கண்டுகொண்ட மகிழ்வில் நினைவுகளில் மூழ்க, பக்கத்து வீட்டு அழகான சிறுமி, தன்னிடம் உறவுகொண்ட இளம் பெண், இப்படி பல உருவங்கள் தமிழ் எழுத்தாளர் நினைவில் தோன்றுகின்றன. இப்படியாக உங்களின் "தென்றல்" முடிகிறது.

அண்ணாச்சி, உங்களால் எப்படி ஸ்டெபான் ஸ்வெக்கைப் போலவே சிந்திக்க முடிந்தது? எனக்கு மிகவும் ஆச்சரியமாய் போய்விட்டது. அதுமட்டுமல்ல ஷேக்ஸ்பியர் எழுதிய "மாக்பெத்" நாடகத்திலிருந்து (மர்மயோகி) இன்று Tell me your dreams சிட்னி ஷெல்டன், டிடெக்டிவ் - ஆர்தர் ஹெய்லி (அந்நியன்) வரை எழுத்தாளர்களின் கதைகளும் தமிழ்த் திரைப்பட இயக்குநர்களின் சிந்தனையும் ஒன்றிணையும் மர்மம் தெரியாமலே இருக்கிறது. பல நாவல்களின் சுருட்டல்கள் அம்பலப்பட்டுப் போன பின்பும் குற்ற உணர்வே இல்லாமல் கதை, இயக்கம், என எவ்வாறு தங்களைப் போன்றவர்கள் உரிமை கொண்டாடுகிறீர்கள் என நினைக்கும்போது தமிழ் உணர்வாளனான உங்கள் ரசிகன் உங்கள்மீது கோபப்பட்டு இப்படிப்பட்ட கடிதத்தை எழுதவேண்டி இருக்கிறது.

இனி இப்படி எந்த நாவலிலிருந்து கதைகளை உருவினாலோ அல்லது காட்சிகளை சுருட்டினாலோ தயவுசெய்து அந்த எழுத்தாளர்களை நன்றியுடன் நினைவு கூருங்கள்.

இப்படிக்கு வேதனையுடன்,

வி சண்முகம் - உங்கள் ரசிகன் ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்கப்பட்ட

## ஈழத்தமிழ் நூலியல், இலக்கிய முன்னோடி : ஜனாப் எஸ் எம் கமால்தீன்

# தமிழ் இலக்கியங்கள்



என் செல்வராஜா
நூலகவியலாளர்

ஜனாப் எஸ் எம் கமால்தீன் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிலும், நூலக உலகிலும் அதிகம் பேசப்பட்டவர். வாழும் போது வாழ்த்தப்படுபவர். கொழும்பு சாஹிரா கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் தன் ஆரம்பக் கல்வியைப் பெற்று, இலங்கை பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டமும், நூலகவியலில் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். பின்னர் கனடா ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் கலைமானிப்பட்டமும் பெற்றவர்.

தான் மாணவராயிருந்த காலத்தில் பண்டிதர் மு. நல்லதம்பி, சுவாமி விபுலாநந்தர், கலாநிதி க. கணபதிப் பிள்ளை, கலாநிதி சு.வித்தியானந்தன் போன்ற தமிழ் அறிஞர்களிடம் கல்வி கற்ற கமால்தீன், தான் கற்ற தமிழ் அறிவை கல்வித்துறையில் மிக்க விருப்புடன் பிரயோகித்து வந்து சிறந்த பல மாணாக்கர்களை சாஹிராக் கல்லூரியில் உருவாக்கியிருந்தார். அவர்களில் ஒருவரே *கடல்கட்டி* என்ற நூலின் பதிப்பாளரும் இதுவரை 100க்கும் அதிகமான தமிழ்நூல்களை தனது பதிப்பகத்தின் வழியாக ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய ஜனாப் எஸ்.எம்.ஹனிபா ஆவார்.

தமிழின்பால் கொண்ட அதீத பற்றுதலால் அறிஞர் கமால்தீன் இலங்கையில் தமிழில் நூலகத்துறை செழித்து வளரும் வகையில் கடினமாக உழைத்துள்ளார். 1961இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை நூலகவியல் சங்கத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினராகச் சேர்ந்து இன்றுவரை அதில் இருந்து வருபவர் ஜனாப் கமால்தீன். அதன் தலைமைப் பொறுப்பையும் சிறிதுகாலம் ஏற்றுச் செயற்பட்ட இவர் 1975இல் தமிழ் மொழி மூலமாக நூலகவியல் கல்வியை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள வழிசெய்தார். தமிழ் நூலகர்கள் உருவாக வேண்டும் என்பதில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு தானே விரிவுரையாளராகவும் இருந்து செயற்பட்டார். இன்றுவரை பல நூலகவியலாளர்களை இவர் தமிழில் உருவாக்கியும் தந்துள்ளார். அவரது உருவாக்கத்தில் மலர்ந்த நூலகவியலாளர்களுள் நானும் ஒருவன் என்பதை பெருமையுடன் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கைத் தேசிய நூலகம் உருவாவதற்கு முன்னோடியாக அமைந்திருந்த இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையில் 1972இல் உதவிப்பணிப்பாளராகவும் இவர் இருந்திருக்கிறார். அதன் நிர்வாகசபையிலும் தொடர்ந்து நீண்டகாலம் பணியாற்றியுள்ள கமால்தீன் பற்றிய மற்றுமொரு முக்கிய விடயம், ஈழத்துத் தமிழரின் மனங்களில் இருந்து எளிதில் மறைந்துவிடாது. 1981ஜுன் 1ல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டபோது, அந்த அவலச்செய்தியை வெளியுலகிற்கு எடுத்துச்சொல்ல அன்று யாழ்மண்ணில் இருந்து இயங்கிய ஒரே பத்திரிகையான ஈழநாடு பத்திரிகையால் முடியாது போய்விட்டது. யாழ் நூலகத்தை எரித்த அரசபடைகள், ஈழநாடு காரியாலயத்தையும் திட்டமிட்டு எரித்துவிட்டதே அதன் காரணம்.

இந்நிலையில் யாழ் நூலகம் எரிந்த செய்தியை தனிப்பட்ட நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டு, எரிந்த தனல் அணையும் முன்னரே தென்னிலங்கையிலிருந்து ஓடோடிவந்து யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்து, அவரின் உதவியுடன் யாழ்ப்பாண நூலகத்தின் அழிவை மதிப்பீடுசெய்யத் தாமாக முன்வந்திருந்தார்.

யாழ்ப்பாண நூலகம் எரிந்தபோது, அதனுடன் சேர்ந்து அங்கு பாதுகாக்கப்பட்டிருந்த பட்டியல்பேழைகள், மற்றும் முக்கியமான பதிவு ஆவணமான நூல்விபரப்பதிவேடு (Accession Register) என்பனவும் எரிந்து சாம்பலாகிவிட்டிருந்தன. இந்நிலையில் என்ன இருந்தது என்ன அழிந்தது என்று எதுவுமே தெரியாத இருண்ட வெளியில் யாழ்ப்பாண நூலகரும் அவரது உதவியாளர்களும் நிலைகுலைந்து நின்றிருந்த வேளையில், அவர்களுக்கு ஆதரவளித்து, யாழ்ப்பாண நூலகத்துடன் நேரடிச் சம்பந்தம் கொண்டிருந்த அறிஞர்கள் பலரை அணுகி உரையாடி, நூலகத்தின் அழியுண்ட நூல்களின் மற்றும் சொத்துக்களின் விபரங்களை உத்தேசமாகவேனும் மீளக்கணக்கிட்டு சுதந்திரமான அறிக்கையொன்றினை இலங்கைத்தேசிய நூலகத்துக்கும், இலங்கை அரசுக்கும் உடனடியாக அனுப்பி வைத்திருந்தார். இந்த ஆவணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் வீரகேசரி உள்ளிட்ட தேசியப் பத்திரிகையிலும் வெளிவந்திருந்தது. இதன்மூலம், அரசாங்கம் மூடிமறைக்க முயற்சி செய்திருந்த ஒரு வரலாற்று அழிப்பை எரிந்த சூடு தணிவதற்குள் துணிச்சலுடன் அறிவார்ந்தமுறையில் வெளிக்கொண்டுவந்திருந்தார்.

அறிஞர் கமால்தீனின் இந்தக் காலத்தே உணர்ந்து செய்த நடவடிக்கையால் உருவான அறிக்கைதான் இன்று இந்த நூலகத்தின் அழிவு பற்றியதான முதலாவது அறிவுசார் ஆவணமாக உள்ளது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். தென்னிலங்கை புத்திஜீவிகளின் கண்ணைத் திறக்கவும் இது உதவியிருந்ததெனலாம்.

கமால்தீன் ஏராளமான கட்டுரைகளை இலக்கியத் துறையிலும், நூலகவியல் துறையிலும் எழுதிப் பத்திரிகைகள் வாயிலாகப் பிரசுரித்திருக்கின்றார். பாடசாலை நூலகர் கைநூல் என்ற அவரது நூல் தமிழ் பாடசாலைகளில் நூலகங்களை இயக்குபவர்களின் அத்தியாவசிய கைநூலாக இன்றும் இருந்து வருகின்றது. சர்வதேச நூலகச் சங்கத்தின் IFLA வெளியீடான பொதுநூலக நியமங்களை தமிழாக்கம் செய்தும் இவர் வெளியிட்டுள்ளார்.

'தாய்லாந்தின் தலைநகரிலே' என்ற பிரயாணக்கட்டுரை நூல், பார்பரின் என்ற பெயரில் இலங்கை முஸ்லிம்களின் மரபுகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைத் தொகுதி, அறிஞர் சித்தி லெப்பை, கலாநிதி ரி.பி.ஜாயா, கலாநிதி ஏ.எம்.ஏ அஸீஸ் ஆகிய பெரியார்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், ஆகியன அவரது ஆக்கங்களில் சிலவாகும்.

1975 - 77 காலகட்டத்தில் 'கல்பனா' என்ற இருவார சஞ்சிகையின் ஆசிரியராகவும், 1978 - 79 காலகட்டத்தில் 'யங் முஸ்லிம்' என்ற ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராகவும் இவர் கடமையாற்றியிருக்கின்றார்.

1987இல் யாழ்ப்பாணத்தில் நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட நூலகவியல் காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தார்.

இலங்கையின் இஸ்லாமிய தமிழ் இலக்கிய உலகில் அமரர் முகம்மது காசிம் சித்திலெவ்வைக்குத் தனியிடம் உள்ளது. அவரது படைப்பக்களுள் 'அஸ்ராருல் ஆலம்' என்ற நூல் பிரசித்தமானது. அந்தக் காலத்தில் இந்த நூல் பெரும் வாதப்பிரதிவாதங்களுக்கு இலக்காகி இருந்தது. அவர் 1885இல் எழுதிய மற்றொரு நூலான 'அஸன்பே சரித்திரம்' இலங்கையில் தோன்றிய முதலாவது நாவல் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிறுவியவர் ஜனாப் கமால்தீனவார். அத்துடன் வழக்கிழந்திருந்த அந்த நாவலை முஸ்லிம் சமய கலாச்சார அமைச்சினால் மறுபதிப்புச் செய்ய வலிகோலியவரும் இவரேயாவார்.

அசன்பேயின் கதை எகிப்து தேச இராஜவம்சத்தவனான அசன் என்னும் இளைஞனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் மர்மமும் திருப்பமும் நிறைந்த ஒரு அற்புதக் கதை. பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் அசன், இந்தியாவில் வளர்ந்து பலரின் கொடுமைகளிலிருந்தும் தப்பி பாசினா என்ற ஆங்கிலப் பெண்ணின் காதலனாவதுடன் தன்நாட்டுக்கு



மீண்டு தன் பெற்றோருடன் சேர்கிறான். வீரசாகசமும் நல்லொழுக்க போதனையும் மிக்க இந்நாவல், தராதர ஈழத்துத் தமிழ்வழக்கில் எழுதப்பட்டது.

ஜனாப் கமால்தீன் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு மீளக்கண்டெடுத்து வழங்கிய இலக்கியங்கள் பல உள்ளன. வழக்கற்றுப் போய்விடும் ஆபத்தை எதிர்நோக்கிய அரிய இலக்கியங்களைத் தேடிப்பிடித்து மீளக் கண்டறியும் போக்கு அவருள் பிரிக்க முடியாதபடி ஊறியுள்ளதென்றே கருதுகின்றேன்.

அவரது 'கடல்கட்டி' என்ற நாவலும் அவ்வாறு அமைந்ததொன்றே. கவனிப்பாரற்றுக் கிடந்த முத்துக் குளிக்கும் தொழில்பற்றியும் அது சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் பற்றியுமான அவரது தேடுதலாக இந்த கடல்கட்டி நாவல் மலர்ந்திருக்கின்றது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாவலை கமால்தீன் எழுதியிருந்தார். அப்போது "முத்துச் சிப்பி" என்ற பெயரில் இந்நாவல் இலங்கையில் தினகரன் நாளிதழில் 1972இல் தொடராக வெளிவந்திருந்தது. தற்போது 30 வருடங்களுக்குப் பின்னர் இது நூலுருவில் வெளியிடப்பட்டு உள்ளது.

அண்மையில் வெளியான கமால்தீனின் மற்றொரு நூல் பற்றியும் இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும். இஸ்லாமிய இலக்கிய உலகம் அறிந்த மூதறிஞர் கவிஞர் அப்துல் காதர் லெப்பை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த முஸ்லிம் தமிழ்க் கவிஞராவார். மட்டக்களப்புக்கு அண்மையில் காத்தான்குடியில் 1913இல் பிறந்த இவர் இயற்றிய 'செய்நம்பு நாச்சியார் காவியம்', அக்காலத்தில் விதந்து போற்றப்பட்டது. இந்நூலை கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் வாயிலாக அண்மையில் நூலுருவில் கொண்டுவந்திருக்கின்றார். நூலில் இக்காவியத்தை மீள்பிரசுரம் செய்ததுடன் மட்டும் நின்றுவிடாது ஆசிரியரான அப்துல் காதர் லெப்பையின் வாழ்க்கை வரலாற்றையும் 'கவிஞர் திலகம்' என்ற பெயரில் தேடித்தொகுத்து இணைத்துத் தந்திருக்கின்றார்.

ஜனாப் கமால்தீன் அவர்களின் இலக்கியப்பணி தொடர்ந்தும் எம் கரங்களை வந்தடைய அவர் இன்னும் நீண்டகாலம் வாழவேண்டும் என்று வாழ்த்தி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



( ஹவாய் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான ஆய்வாளர் கலாநிதி சங்கரன் கிருஷ்ணா, *Postcolonial Insecurities: India, Sri Lanka and the Question of Nationhood* என்ற நூலை எழுதி இருந்தார். அவர் தற்போது இலங்கை, இந்தியாவை மையப்படுத்தி தேசியவாதம், இன அடையாளமும் முரண்பாடுகளும், அடையாள அரசியல், காலனியாதிக்கத்திற்குப்பின் அரசியல் விடயங்களில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.)

## இலங்கை — இந்தியா — புலிகள்

# இந்திய வெளியுறவுக் கொள்கை

விடுதலைப் போராட்டங்களின் ஆரம்ப காலங்களில் குறிப்பாக, இந்திராகாந்தியின் காலகட்டத்தில், இந்தியா தனது மேலாதிக்கத்தை நேரடியாக மேற்கொள்ளும் வகையிலான வெளிநாட்டுக் கொள்கையை வைத்திருந்தது. அதனாலேயே அயல் நாட்டு விடயங்களில் நேரடியான தலையீட்டை இந்தியா மேற்கொண்டது. ஆனால் தொண்ணூறுக்களில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டே வெளியுறவுக் கொள்கை வகுப்பு நிகழ்ந்தது.

பங்களாதேஷை பிரித்துக் கொடுத்தது போல் இந்தியா தமிழீழத்தையும் பிரித்துத் தரும் என்ற போக்கு ஈழத்தமிழர்களிடம் முன்னர் இருந்தது. ஆனால் பங்களாதேஷை பிரிக்க இந்திராகாந்தி திட்டமிட்டு இருக்கவில்லை. பங்களாதேஷ் பிரிவினைக்கு சில மாதங்கள் வரை பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகண்டு இந்தியாவில் இருந்த 10 மில்லியன் பங்களாதேஷ் அகதிகளை பங்களாதேஷுக்கு திருப்பி அனுப்பவே இந்திராகாந்தி முயன்றார். ஆனால் சடுதியாக களநிலவரத்தில் ஏற்பட்ட மாற்றம் இந்திய இராணுவத்தின் நேரடித் தலையீட்டுக்கும் பங்களாதேஷ் உருவாக்கத்துக்கும் வித்திட்டது.

தற்போதுள்ள சர்வதேசச் சூழல் உலக வரைபடம் அப்படியே மாற்றங்கள் இன்றி இருப்பதையே விரும்புகிறது. நாடுகளைக் கைப்பற்றுவதோ புதிய தேசங்கள் உருவாவதோ தற்போது சாத்தியமில்லை. கிழக்கு தீமோரில் மனித உரிமைகள் கட்டுக்கடங்காமல் மீறப்பட்டு உலகின் கவனத்தை திருப்பும் அளவில் மனித அவலங்கள் ஏற்பட்டதையடுத்தே சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி புதிய தேசத்தை உருவாக்க சர்வதேச சமூகம் அங்கிகாரத்தை வழங்கியது. கிழக்கு தீமோரின் உருவாக்கத்தில் அவுஸ்திரேலியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. இலங்கையில் சர்வதேச சமூகம் தலையிட்டு சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி புதிய தேசத்தை உருவாக்க அங்கு உலகை அதிர வைக்கும்படியான மனித உரிமை மீறல்கள் நிகழ வேண்டும்.

இந்திரா காந்தியின் மறைவுக்குப்பின் ராஜீவ்காந்தி ஒரு உடனடித் தீர்வுக்கு விரைந்ததால் எற்பட்ட விளைவே ராஜீவின் படுகொலை. ராஜீவ்காந்தி உண்மையிலேயே ஒரு தீர்வை விரும்பியிருந்தார். ஆனால் அவரைச் சுற்றி இருந்தவர்களின் முடிவுகள் சர்ச்சைக்குரியனவாகவே இருந்தன. இந்திய ஆதிக்கத்தை கையில் வைத்துள்ள பிராமணியம் ஒரு பிராமணியத் தலைவனை தங்கள் மண்ணில் படுகொலை செய்ததை அவ்வளவு எளிதில் மறந்து விடமாட்டாது.

எப்போதும் ஒரு தீர்வுக்கு அவசர அவசரமாக செல்வது ஆபத்தானது. மெதுவாக நகர்வதே சாதுரியமானது. பஞ்சாப் பிரச்சினையும் வடஅயர்லாந்துப் பிரச்சினையும் அவ்வாறே மெதுவான தீர்வை நோக்கியே நகர்த்தப்பட்டது. அதனால் அங்கு அமைதி சாத்தியமானதாக இருந்தது. இலங்கைக்கும் அவ்வாறான போக்கே பொருத்தமானதாக இருக்கும்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்பதை விட்டு புரிந்துணர்வுக்கான அடித்தளம் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் நிதி அமைச்சருக்கு இந்தியாவில் உள்ளவர்களின் வருமான வரிவிபரங்களே சரியாகத் தெரியாது. எவ்வளவு பணம் கறுப்புச் சந்தையில் புரள்கிறது என்றும் தெரியாது. அதனை அன்றைய நிதியமைச்சர் இன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கே ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் ஈழத்தமிழர்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் அவர்களின் வருமானத்தை கணக்குப் பண்ணி வரி அறவிடும் திறமை புலிகளிடம் உள்ளது. விடுதலைப் புலிகள் ஒரு தேசத்தை உருவாக்கினால் தெற்காசியாவில் அதுவே பலமான ஒரு தேசமாக அமையும். ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு அரசியல் அமைப்பு என்பதைக் காட்டிலும் ஒரு பல்தேசிய நிறுவனமாகவே செயற்படுகின்றனர்.

( யூலை 25ல் வெம்பிளி ரவுண் ஹோலில் இடம்பெற்ற கலந்துரையாடலின் தொகுப்பு இது. இக்கலந்துரையாடல் மூன்று மணிநேரம் நீடித்தது. இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகள் விரைவான தீர்வுக்கு அவசரப்படுத்தாமல் இருந்தால் காலப்போக்கில் புலிகள் அழிந்து போய்விடுவார்கள் என ஒருவர் சுட்டிக்காட்டினார். சிங்கள மக்கள் இன்னமும் தமிழர்களின் பிரச்சினையை விளங்கிக் கொள்ளவில்லை அவர்கள் தொடர்ந்தும் இனவாதிகளாக இருப்பதாக சிலர் சுட்டிக்காட்டினர். மறுமுனையில் இனப்படுகொலைக்கு முக்கிய காரணமான ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவை வளர்க்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிங்கள இடதுசாரிகளுடன் உறவை வளர்த்து புரிந்துணர்வை வளர்க்க முயற்சிக்கவில்லை என்று சுட்டிக்காட்டினர். இலங்கையில் ஜேவிபி, இந்தியாவில் மார்க்சிய லெனினிஸ்ட் கட்சிகள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதும் அவை பற்றிய தெளிவான புரிதல் காணப்படவில்லை.❑)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடம்மாறிய லண்டன் தமிழ் அமைப்புகள்

இராஜேஸ் பாலா
நாவலாசிரியர்,
தமிழ் அமைப்புகளின் நிறுவனர்

நான் ஒரு நாவலாசிரியை, அத்துடன் நான்செய்த தொழிலுடன் (குழந்தைகள் நல அதிகாரி) தொடர்பான மருத்துவரீதியான புத்தகங்களையும் எழுதியிருக்கிறேன். அரசியல் கட்டுரைகள் நிறைய எழுதியதில்லை.

செப்ரம்பர் 2, 2005 ஒரு கூட்டத்திற்குப் போயிருந்தேன் அங்கு பேசப்பட்ட சில விடயங்கள் இந்தக் கட்டுரைக்கு உந்துதல் தந்தன. சில வரலாற்று உண்மைகளைச் சொல்வது எனது கடமையாயிருக்கிறது.

இருபது வருடங்களுக்கு முன் மிகவும் கஸ்டப்பட்டுத் தொடங்கிய சில தமிழர் ஸ்தாபனங்கள் இன்று மூடப்படும் நிலைக்கு வந்து விட்டதாகக் கேள்விப்பட்டதும் வந்த துயர் தாங்க முடியாமலிருக்கிறது.

இன்று நூற்றுக்கணக்கில் உலகமெல்லாம் பரந்து கிடக்கும் தமிழர் அமைப்புக்களின் ஆதி ஸ்தாபனமான இங்கிலாந்து தமிழ் அகதிகள் ஸ்தாபனத்தை என்னுடன் சேர்ந்து உண்டாக்க, வளர்க்க ஆத்ம சுத்தியுடன் பணிபுரிந்த ரஞ்சித்குமார், வரதகுமார் இருவரையும் நீண்ட காலத்தின் பின் சந்தித்தேன்.

இன்று இலங்கையில் நடக்கும் விடயங்கள், இருபது வருடங்களுக்கு முன் இலங்கையில் நடந்த விடயங்களை விட மிகவும் வித்தியாசமானவை. அன்று இலங்கைத் தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கொலை செய்யப்பட்டார்கள் இன்று தமிழரைத் தமிழரே கொலை செய்து குவிக்கிறார்கள். இது இருதயத்தை வெட்டிப் பிளக்கிறது.

இன்று தமிழ் ஊடகங்களில் உண்மை சொல்லும் ஊடகமாகத் 'தேசம்' சஞ்சிகை இருப்பதால் தமிழ் மக்களுக்காக எழுதப்படும் இந்த விடயம் ஒரு சரித்திரத்துடன் இணைந்த உண்மை திரிவுபடாமற் போய்ச்சேரும் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன்.

1980க்கு முன் லண்டனில் அரசியல்ரீதியான எந்த அமைப்பும் இருக்கவில்லை. 1971ல்ஜே.வி.பி. கலவரம் தொடங்கியபோது திருமதி பண்டாரநாயக்கா, திருமதி இந்திரா காந்தியின் தாராளமான இராணுவ உதவியுடன் 1971 பெப்ரவரி முதல் மே வரை 20,000 - 30,000 ஆயிரம் சிங்கள மக்களைக் கொன்று குவித்தார். இலங்கை இராணுவத்தால் இறந்தவாகளில் பெரும்பாலோர் சாதாரண சிங்கள மக்கள். சிங்களப் பாடசாலை, கல்லூரி மாணவ மாணவிகள் இராணுவத்தினரால் மனிதாபிமானமற்ற முறையிற் கொலை செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான சிங்களப் பெண்கள் பயங்கரமான பாலியற் கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். கிராமங்கள் பல தீயிலிடப்பட்டன.

அப்போது, சிங்கள தமிழ் பேதமற்ற சிந்தனையாளர் சிலர் லண்டனில் ஒன்று சேர்ந்து சிங்கள மக்களின் மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தோம்.

1981 யூன் 1ல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. ஒரு சிலர் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தோம். இலங்கைத் தமிழரின் ஆதரவற்ற நிலையை உலகுக்குச் சொல்ல, இலங்கைத் தமிழரின் சுயநிர்ணய உரிமை பற்றிப் பிரசாரம் செய்யத் தமிழ் மகளீர் அணி, எனது தலைமையில் 1982ம் ஆண்டு லண்டனிற் தொடங்கப்பட்டது.

நிர்மலா இலங்கையிற் கைது செய்யப்பட்டதும் தமிழ் மகளீரணியினர் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்பாக பல ஆர்ப்பாட்டங்களைச் செய்தோம்.

இது தொடங்க எனக்கு உதவி செய்தவர்கள் மனிதாபிமானம் கொண்ட பலதரப்பட்ட சிந்தனையாளர்கள். அவர்களில் ஒருவர் இன்று விடுதலைப் புலிகளின் ஆலோசகராக இருக்கும் பாலசிங்கம், அடுத்தவர் உப்பாலி கூரேய் என்ற சிங்கள வழக்கறிஞர், தமிழ் மாணவர்கள் (பலர் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்) அத்துடன் பாலசுப்பிரமணியம் போன்ற பல சிந்தனையாளர்கள்.

அந்தக் காலத்தில் தமிழ் மகளிர் அணியிலிருந்த பல பெணகள் ஆங்கிலம் படித்த அதிகம் தமிழ் தெரியாத தமிழ்ப் பெண்கள் சாமினி (சிங்கப்பூர்), கமலா (இந்தியா), வாசுகி (தென்ஆபிரிக்கா), மற்றும் இலங்கையைச் சேர்ந்த சறோஜினி, தனு, கமலினி, ரமணி செல்லையா போன்றவர்கள் முக்கிய பங்கெடுத்தனர்.

அமெரிக்காவிலிருந்து 'அவுட்றைட்' லண்டனிலிருந்து 'த ஸ்பார் றிப்' என்ற இரு பிரபலம் வாய்ந்த பெண்கள் பத்திரிகைகள் 'தமிழ் மக்களுக்குச் சமத்துவம் கொடு, நிர்மலாவை விடுதலை செய்' என்ற எங்கள் கோஷங்களுடன் முழுமையாக இணைந்தன.

அங்கோலா தொடங்கி மங்கோலியா வரையுள்ள பெண்கள் ஸ்தாபனங்கள் எங்களுடன் கைசேர்த்தன. ஜே.ஆர் ஜெயவார்த்தனாவுக்கு இரவு பகலாக உலகப் பெண்கள் அமைப்புக்கள் மூலம் இலங்கைத் தமிழர் நிலைபற்றிக் கேள்வி கேட்டோம். இலங்கையிலிருந்து எந்த மந்திரி வந்தாலும் அவர்கள்தங்கி நிற்கும் 'கிளாறிட்ஜஸ்' என்ற பெயர் பெற்ற ஹோட்டேலுக்கு முன்னால் பல பெண்கள் 'தமிழருக்கு உரிமை கொடு, நிர்மலாவை விடுதலை செய்' என்ற கோஷத்துடன் நிற்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசாங்கம் தூண்டி விட்டதின்பேரில் லண்டன் ஸ்பெஸ்சல் பிறாஞ்சின் தேவையற்ற தொல்லைகளுக்கு உள்ளானேன். அதை இடது சாரிப் பத்திரிகைகளான 'நியு ஸ்ரேட்மன்ட்' போன்றவை வெகுவாகக் கண்டித்தன. இங்கிலாந்திலுள்ள பல பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவிகள் எங்கள் பிரசாரத்தில் இணைந்தார்கள்.



1983 இனக்கலவரத்தின்பின் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரசியல் அகதிகளாய், நாடற்ற அனாதைகளாய் உலகின் பல பாகங்களிலும் உயிருக்குப் பயந்து ஓடியபோது, ஐரோப்பிய இடதுசாரிகள் இலங்கை தமிழர் பிரச்சினையை முன்னெடுத்தார் கள். அவர்களின் ஆதரவுடன், பாலசிங்கத்தின் (இடம்) ஆலோசனையுடன், வரதகுரமாரின் (வலம்) பலதரப்பட்ட அறிக்கைகளுடன் ஐரோப்பாவில் பல யூனிவர்சிட்டிகள், மனித உரிமை ஸ்தாபனங்களைச் சந்தித்தேன்.

அத்துடன் இங்கிலாந்தில் தொழிற்கட்சியின் ஆதரவு அளப்பரியது. இங்கிலாந்தின் முதல் கறுப்பு எம்.பி.யாகிய பேர்னி கிராண்ட் என்பவர் இங்கிலாந்தில் வாழும் இலங்கைத் தமிழரின் பிரச்சினையை இங்கிலாந்தின் தேசியப் பிரச்சினையாக்கினார். அத்துடன் ஆங்கிலப் பாராளுமன்றத் தில் பல கேள்விகளை எழுப்பினார். பல எம்.பி கள் பாராளுமன்றத்திலேயே தமிழர்களுக்காகப் பல கூட்டங்களை ஒழுங்கு செய்தார்கள். இலங்கையில் நடக்கும் கொடுமைகளைப் பார்க்கச் சென்றார்கள். பல பத்திரிகையா ளர்களை அனுப்பினோம்.

இக்காலகட்டத்தில் லண்டனுக்கு வந்து சேர்ந்த தமிழ் அகதிகளுக்காகத் தமிழ் அகதிகள் ஸ்தாபனம் எனது தலைமையில் நிறுவப்பட்டது. இந்த ஸ்தாபனம் உண்டாக எந்த விதமான அரசியல் பிரச்சினைகளையும் பாராமல் அயராது உழைத்தவர்கள் பலர். இதைத் தொடர்ந்து தமிழர்களுக்காக வீடமைப்பு ஸ்தாபனம் தொடங்கப்பட்டது. அதன் பிரிவாக 'தமிழ்டெக்' தொடங்கப்பட்டது.

இப்படியான சிரமங்களுக்குள்ளால் கட்டியெழுப்பப் பட்ட ஸ்தாபனங்களும் பிரசாரத் தூணும் இன்று மாசு படிந்து விட்டது. புலிகள் ஸ்தாபனங்களைத் தங்கள் கைவசப்படுத்தினார்கள்.

இந்தக்கால கட்டத்தில் இலங்கையில் புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக் கொண்டோர் தேடி அழிக்கப்பட்டனர். தமிழர்களுக்கிடையே நடந்த பிளவுகளைப் பாவித்துச் சிங்களப் படைகளும் தமிழ்ப் பகுதிகளில முன்னேறியது. லண்டனில் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட எல்லா ஸ்தாபனங்களிலும் புலி சார்ந்தோர் பதவியில் அமர்த்தப்பட்டார்கள்.

இவர்களின் இந்த முன்னெடுப்புக்களில் மோதிக்கொள்ள விரும்பாதபடியால் எனது தலைமைப் பதவியை விட்டு 1988ல் விலகினேன். தமிழ் சமுதாயத்தில் மிக கரிசனை கொண்ட ரஞ்ஜிதகுமார், வரதகுமார் என்போர் துரத்தப்பட்டார்கள். இவர்களின் கடமையுணர்வு, அயராத உழைப்பு தூக்கியெறியப்பட்டது. தமிழர் ஸ்தாபனங்களில் இருந்து, அதை ஆரம்பித்து வைத்த மற்ற இயக்கத்தைச் சேர்ந்தோர் நீக்கப்பட்டார்கள்.

இலங்கைத் தமிழ்ப் பிரச்சினைகள் பற்றிய அரசியல் பிரசாரம் குறைந்தது. ஆங்கிலேய ஊடகங்கள், பெண்கள் ஸ்தாபனங்கள், பொது அமைப்புக்களின் ஆதரவை இழந்தோம். பிரித்தானிய அரசியலைச் சேர்ந்தோரின் வலிமையான ஆதரவையும் இழந்தோம்.

எந்தவிதமான வருவாயோ சம்பளமோ எதிர் பார்க்காமல் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்குச் சம்பளத்தில் கண்ணுள்ள, சமுதாய அக்கறையற்றோர் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதைத் தவிர எந்த விதமான அந்தஸ்துமற்றவர்கள். சமுதாயக் கடமைகளையும் அரசியலாக்கி விட்டார்கள்



அன்று, 20 வருடங்களுக்கு முன்னால் லண்டனில் எங்களுக்கிருந்த ஆதரவு, அனுதாபம் இன்றில்லை. பொது ஸ்தாபனங்களின் ஆதரவும் பிரசாரமும் இல்லாத படியால் தமிழர்களுக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் இங்கிலாந்தில் தடை செய்யப் பட்டபோது அதை எதிர்த்துக் குரல் கொடுக்கச் சிறுபான்மையின ஸ்தாபனங்கள் முன்வரவில்லை.

புலிகளால் பொறுப்பேற்கப்பட்ட ஸ்தாபனங்கள் இன்று அரசாங்கத்தின் பாரிய கண்காணிப்பிலிருப்பது வெட்கமான விடயம். ஒரு சமுதாயத்தின் விடுதலைக்கு சமுதாயத்தின் பல தரப்பட்ட குரல்கள் இன்றியமையாதவை. ஒரு சமுதாயத்தின் விடுதலைக்கு சமூதாய நோக்குடையவர்கள், ஆத்மீகவாதிகள், ஜனநாயகவாதிகள், மாறுபட்ட கருத்துடையோர், இலக்கியம் படைப்போர், பெண்கள் அமைப்புக்கள் என்று பலதரப்பட்டோரின் ஒன்றிணைந்த போராட்டம் மிக மிக முக்கியம்.

இன்று தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவதாயிருந்தால் புலி முத்திரை குத்த வேண்டியிருக்கிறது. இருபது வருடங்களுக்கு முன் யாரும் எந்த முத்திரையுமின்றித் தமிழர்கள் என்ற பெயரில் ஒன்று சேர்ந்தோம். எவரும் எங்களுக்குப் பண உதவி செய்யவில்லை. நானும், வரதரும் ரஞ்ஜித்தும் இரவு ஒரு மணி வரையுமிருந்து அறிக்கைகள் எழுதியபோது எங்களுக்குத் தேனீர்கூடக் கிடைக்கவில்லை. அப்படியான பரிபூரண இதய சுத்தியுடன் தமிழ் அகதி ஸ்தாபனத்தைக் கட்டி எழுப்பினோம். எங்களுக்கு ரைப்ரைட்டர் இருக்கவில்லை. 'சி.அன்ட்.டி' என்ற ஸ்தாபனத்திடம் டைப்ரைட்டர் கடன் வாங்கினோம். ஜேரமி கோர்பின் என்ற எம்.பி மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இருந்து வெள்ளைத்தாள்கள் (பேப்பர்) எடுத்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985ம் ஆண்டு கால கட்டத்தில் பிரித்தானியாவிலுள்ள பல்வேறு ஆத்மீக, மனித உரிமை ஸ்தாபனங்கள், இடதுசாரி, பெணகள் அமைப்புக்கள் தமிழ் அகதிகள் ஸ்தாபனத்துடன் தங்களை இணைத்துக்கொண்டு இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடின. லண்டன் மாநகரத் தலைவர் கென் லிவிங்ஸ்டன் மூலம் பல உள்த்துறை வீடமைப்புகள் வீடுகளைத் தந்தன.

தமிழ் அகதிகள் ஸ்தாபனத்தின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை உலகமயப் படுத்தினோம். 1985 முதல் 1988 வரை, இலங்கையில் ஆயதமெடுத்துப் போராடிக் கொண்டிருந்த ஐந்து குழுக்களும் எனது தலைமையில், லண்டனில் ஒன்றாய் வேலை செய்தன. இலங்கைத் தமிழரின் பிரச்சினையை முன்னெடுக்கும் ஆயதக் குழுவிலுள்ளோரின் லண்டன் பிரதிநிதிகள் ஒரு பெண்ணின் தலைமையில் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கியதையும் தங்கள் இனப்பிரச்சினையை உலக மயப்படுத்திதையும் லணடனிலிருந்த சிறுபான்மையின மக்கள் கண்டு அதிசயித்தார்கள், வரவேற்றார்கள்.

தமிழ் அகதிகள் ஸதாபனம் இலங்கையில் நடந்த தமிழர் போராட்டத்தை உலகுக்கு வெளிப்படுத்தியது. தமிழர் அகதிகள் வீடமைப்பு ஸ்தாபனம் மேற்கு ஐரோப்பாவிலேயே சிறுபான்மை மக்களுக்காக உண்டாக்கப்பட்ட ஒரு பெரிய ஸ்தாபனமாகும். பிரித்தானியர் மட்டுமல்ல அன்று லண்டனுக்கு வந்திருந்த தென் ஆபிரிக்க ஏ.என்.சி. தலைவா ஒலிவா தம்பொ கூட எங்களையணைத்து ஆசிர்வதித்தார்.

பிரித்தானியாவில் டெலோ (ஜேசுதாசன்), ஈ.பி.ஆர்.எல்.எவ் (தில்லை, அரியநாயகம்), ஈரோஸ் (ரவி), புளட் (போல் சத்தியநேசன்), எல்ரிரிஈ (குகன்) இயக்கத்தினர் தோளோடு தோளிணைத்துத் தமிழ் அகதிகளுக்காகவும் இலங்கையிலுள்ள எம் மக்களுக்காகவும் போராடினார்கள்.

காலக்கிரமத்தில் புலிகள் மாற்று அமைப்பினரை இலங்கையில் ஓரம்கட்டியது போல் லண்டனில் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனங்களில் இருந்தும் துரத்தி விட்டார்கள். எல்லா அமைப்புகளும் தங்கள் ஆதிக்கத்திலிருக்க வேண்டுமென நினைப்பது ஒரு ஏகாதிபத்திய வாதம். ஒடுக்கு முறையின் மிச்ச சொச்சம். ஜனநாயக நாடுகளில் அந்த முறையைக் கொண்டு வந்திருக்கத் தேவையில்லை. வர்த்தக ரீதியாக ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடாது. இன்று எங்கள் விடுதலைப் போராட்டம் வியாபாரிகளின் லாப நட்டக் கணக்கில் நகர்கிறது. ஊடகங்கள் கூடத் தங்கள் வருவாயை எதிர்பார்த்து விடயங்களைப் பிரசுரிக்கின்றன.

உண்மைகளைச் சொல்லும் எங்களை இவர்கள் துரோகிகள் என்று 'போட்டு' முடிக்கலாம். தங்கள் இலாபத்திற்குத் தாளம் போடும் ஊடக வாதிகளும், வியாபாரிகளும், தமிழ் அரசியற் தரகர்களும் தான் எங்கள் விடுதலையின் எதிரிகள்.

இன்று, பிரித்தானியாவில் தமிழர்களின் அமைப்புக்களை, கோயில்களைக் கூடச் சந்தேகக் கண்களுடன் பார்க்கிறார்கள். எங்கள் விடுதலைப் போராட்டம் அந்த நிலைக்குப் போய்விட்டது. உண்மைகளைத் திரிபு படுத்துவது பத்திரிகை விற்பனைக்கு ஒரு தற்காலிக வெற்றியைத்தருமே தவிர நீண்ட காலப் பயனைத் தாராது.

அது போல் உண்மையற்ற வரலாறுகளைச் சொல்லும் போது கேட்க இனிமையாயிருக்கும். ஆனால் அது சரித்திரமாகாது. இலங்கைத் தமிழரின் விடுதலைப்போராட்டம் பல இயக்கங்களால் தொடங்கப்பட்டது. பல கால கட்டத்தில் பல பரிமாணங்களில் பல தமிழ்த் தலைவர்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 65,000 மக்களின் இறப்பு பலனற்றுப் போய்விடக்கூடாது. லண்டனில் உள்ளவர்கள் உயிர்த் தியாகம் செய்யாவிட்டாலும் மிகவும் பாரிய உடல் உளப் பணிகளைச் செய்திருக்கிறார்கள்.

லண்டனில் தமிழ் மக்களுக்காக, பிரித்தானிய சட்ட திட்டங்களின் அடிப்படையில் உண்டாக்கிய தமிழர் ஸ்தாபனங்களை இலங்கையிலுள்ள புலிகளின் சட்டதிட்டங்களின் அடிப்படையில் நடத்த நினைப்பது சரியல்ல. வெளிநாடுகளில் ஒரு பொது ஸ்தாபனத்தைக் கட்டி எழுப்புவது மிகக் கஷ்டம். அப்படிக் கட்டிய ஸதாபனம் இன்று எப்படி மாறிப்போனது என்பதற்குப் புலிகள்தான் காரணம். எல்லாவற்றையும் தாங்கள்தான் ஆரம்பித்தார்கள் என்று பொய் சொல்வது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதற்குச் சமம்.

பிரித்தானிய சட்டதிட்டங்களுக்குள் பணிந்து இந்த ஸ்தாபனங்கள் தொடர்ந்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. வரலாற்றைத் திரிபுபடுத்த வேண்டாம். தமிழரின் சரித்திரம் மிகவும் தொன்மையானது. ஆதாரங் களைக் கவனத்துடன் காட்ட வேண்டும். மிகைப்படுத்திக் காட்டத் தேவையில்லை.

உதாரணமாக, அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசிய ஒரு வயது வந்த பெண்மணி சீக்கியரின் தலைப்பாகை பற்றி 'இருக்கு' வேதத்தில் எழுதியிருப்பதாகச் சொன்னார். லண்டனில் படிக்கும் பதினொரு வயதுக் குழந்தைக்கும் இருக்கு வேதம் இரண்டாயிர வருடங்களுக்கு மேலான சரித்திரத்தைக் கொண்டது. சீக்கிய வேதம் பிறந்தது சுமார் ஐந்நூறு வருடங்கள் தான் என்ற உண்மை தெரியும். சிரிப்பைத்தரும் இப்படியான பேச்சுக்களால் நேரத்தை வீணாக்குவது தேவைதானா?

இலங்கைச் சரித்திரத்துடன் இணைந்த தமிழர் விடுதலைப் போராட்டம் வெற்றியடைய முனனெடுக்கும் எங்கள் போராட்டத்திற்குத் தேவையற்ற, உண்மைக்குப் புறம்பான வரலாறுகளின் ஆதாரங்கள் அர்த்தமற்றவை. காலப் பரிமாணத்தில் இனவாதிகள் சரித்திரத்தையே மாற்றி எழுதுகிறார்கள்.

இலங்கையில் சமத்துவத்துடன் வாழ அங்கு பிறந்த அத்தனை பேருக்கும் உரிமையுண்டு. லண்டனில் திரு செருபின் கேட்டது போல் மக்களுக்காக மக்களே போராடிய காலம் மீண்டும் வரவேண்டும். போராட்டத்தைத் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாபத்திறகாகக் குத்தகை எடுத்தவர்கள் தொலையும் வரை போராட்டம் சரியான பாதையிற் போக வழியில்லை.

லண்டனிலுள்ள தமிழர் ஸ்தாபனங்கள் ஒரு கௌரவமான நிலையில் தொடர பிரித்தானிய வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குப் பதில் தமிழ்ச் சட்டங்களைப் பின் பற்றினால் பிரச்சினைகள்தான் தொடரும்

தமிழர் வீடமைப்பு ஸ்தாபனம் இன்று பிரித்தானிய அரசாங்கத்தின் கண்காணிப்புக்கு ஆளாகும் நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழர் அகதிகள் ஸ்தாபனத்திற்கு அடுத்த வருட நிதியுதவி நிறுத்தப்படலாம் என்று சொல்லப்படுகிறது. தமிழர் மத்தியில் இன்றும் அயராமல் சமுதாயப் பணி செய்யும் திரு செருபின் போன்றவர்களின் முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்று தெரியாது.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு. ஒற்றுமையில்லையேல் அனைவருக்கும் தாழ்வுதான். உண்மை சொல்பவர்களைத் துரோகிகள் என்று சொல்லியழிக்காதீர்கள்.

உண்மை என்றும் வெல்லும். சிந்திக்கப் பழகுங்கள். எங்கள் சமுதாயம் ஒரு மந்தைக் கூட்டமாக நடத்தப்படுகிறது. இது மனித உரிமைகளுக்கு எதிரானது.

குழந்தைகளைக் கொலைகாரர்களாக்கிச் சண்டையைத் தொடர்வது தர்மத்திற்குப் பொறுக்காது. இலங்கையில் ஏழைகளாய்ப் பிறந்த காரணத்தால் பல குழந்தைகளின் வாழ்வு போர்க்களத்தில் முடிவது அதர்மம். லண்டன் ஸ்தாபனங்களைக் காப்பாற்றச் சில நல்ல மனங்கள் தவிப்பதுபோல் இலங்கையில் எங்கள் மக்களின் வாழ்க்கைக்கு, விடிவுக்கு, சமாதானத்திற்கு யாவரும் பாடுபடுவோம். ❑


**மக்கள் சேவையே அப்பன் விநாயகன் சேவை**

**வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் சமூகப்பணி மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட உள்ளது.**

# முதியோர் இல்லம்
# Home for the Aged

***அறுவது பேருக்கான படுக்கை வசதிகள்***

***ஆண் – பெண் தனித்தனி படுக்கைப் பிரிவுகள்***

***உணவு மற்றும் ஒன்றுகூடல் மண்டபம்***

***4 மேசைகள் – 60 கதிரைகள் – தளபாடங்கள்***

***கிணறு – இறைப்பு இயந்திரம் – நீர்த்தாங்கி***

***சமையலறை மற்றும் கழிப்பிட வசதிகள்***

2005 Tsunami Relief Fund Guarantee, Ltd அமைப்பே இத்திட்டத்தை பொறுப்பேற்று நடாத்த உள்ளது.

10 மாதங்களில் நிறைவேற்றப்படக் கூடிய இத்திட்ட மதிப்பீடு £27,390

**இத்திட்டத்தில் உங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்புவர்கள் கற்பக விநாயகர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

**Tel : 020 8527 3819**

**சமூகப்பணிகளில் கற்பக விநாயகர் ஆலயம்**

* £40,000 தாயகத்திற்கு அனுப்பி உதவியது. ( கார்ள்டன் ரவல்ஸின் உதவியுடன் ) *

* திருக்கோயிலில் உள்ள குருகுலத்தில் 36 சிறார்களை ஆலயம் பராமரிக்கிறது. *

*தேர்த்திருவிழாவில் சேரும் நிதி வெண்புறாத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. *

* முத்தோர் நலன்புரி நிலையம் மற்றும் இலக்கிய முயற்சிகளுக்கு உதவி வருகிறது. *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொறியியல்துறையில் பட்டம்பெற்ற லீனா மணிமேகலை இப்போது ஒளிப்பதிவில் நுழைந்து மாற்று சினிமாவைப் படைப்பதில் ஈடுபட்டுள்ளார். மாத்தம்மா, பறை, Break the Shackles - if not we .... who? என்ற 3 விவரணப்படங்களையும், தீர்ந்து போயிருந்தது காதல் என்ற குறும்படத்தையும் இயக்கி உள்ளார். மேலும் கனவுப்பட்டறை வெளியீட்டகத்தின் மூலம் இலக்கியத்துறையிலும் ஈடுபட்டு உள்ளார். 2002ல் இந்தியாவின் சிறந்த பெண்மணி என்ற விருதை இவர் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.**





# சந்திப்பு : லீனா மணிமேகலை

த ஜெயபாலன்

ஆவணப்படம் பற்றிய பட்டறைக்காக ஐரோப்பாவுக்கு வந்திருந்த லீனா மணிமேகலை லண்டனுக்கும் வந்திருந்தார். கிழக்கு இலண்டனில் தங்கியிருந்த அவரை அவர் தங்கி இருந்த விம்பம் அமைப்பாளர், ஓவியர் கிருஷ்ணராஜாவின் இல்லத்தில் காலைப் பொழுதில் சந்தித்து உரையாடினோம். மிகவும் எளிமையாகவும் உற்சாகமாகவும் காணப்பட்ட மணிமேகலை எமது கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது தனது அனுபவங்களையும் இணைத்து பகிர்ந்து கொண்டார்.

தேசம் : தமிழக சினிமா பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது. இந்த சினிமாவின் அடுத்த கட்ட வளர்ச்சி எவ்வாறு அமையும் என நினைக்கிறீர்கள் ?

மணிமேகலை : வளராமல் திரும்பவும் கீழே போயிட்டிருக்கோ என்ற சின்ன சந்தேகம் எனக்கிருக்கு. பாடல்கள், நடனம் என்று பெண்களின் உடலை மையப்படுத்தி திரும்பத் திரும்ப hero worshipபைக் காட்டும் வியாபார ரீதியான படங்களே வெளிவருகிறன. மனிதர்களுடைய கீழான உணர்ச்சிகளைத் தடவிக் கொடுத்து அதை திரும்பத் திரும்ப அவங்களை பார்க்க வைக்கிற ஒரு விசயம் தான் தமிழ் சினிமாவில நடந்திட்டிருக்கு. (சிரத்தையுடன் பதிலளித்துக் கொண்டிருந்தவர்) கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய்த்தான் தமிழ் சினிமா எனக்குத் தோன்றது. (என நளினமான புன்முறுவலுடன் தெரிவித்தார். )

இது ஒரு பக்கம் போயிட்டிருந்தாலும் இன்னொரு பக்கம் digital புரட்சி வந்திட்டிருக்கு. பெரிய பணவசதி இருந்தால் தான் சினிமாவுக்குள் வர முடியும் என்றது மாறி, ரொம்ப ஜனநாயகபூர்வமா ஆயிட்டிருக்கு. digital புரட்சியால cost cutting ஏற்பட்டிருக்கு. 35mm, 50mm இல் இருந்து 60mm, 70mm இல் இருந்து எல்லோரும் digitalக்கு வரத்துவங்கிறப்போ நிறைய சிந்தனா வாதிகள், தீவிர சினிமாமேல அக்கறை இருக்கிறவங்க மாற்று சினிமாமேல அக்கறை இருக்கிறவங்க சினிமாவை கையில எடுக்கிற நிலை வந்திட்டிருக்கு. அது ஒரு positiveஆ போயிட்டிருக்கு.

தேசம் : இந்திய சினிமா அதன் அயல் நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் அத்துறை வளர்வதற்கு தடையாக இருந்து வருகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன ?

மணிமேகலை : ஸ்ரீலங்காவில, பங்களாதேஷில, பாகிஸ்தானில வருகிற சினிமா தயவு செய்து இந்திய சினிமாவை பின்பற்றக் கூடாது. ஸ்ரீலங்காவில இருந்து சினிமா வருமென்றா ஈரான் சினிமாவோ, பிரெஞ் சினிமாவோ, ஐரோப்பிய சினிமாவோ பார்த்து வளரனும். இந்திய சினிமாவை பார்த்து வளர்ந்தா அது சரியான போக்கா இருக்க முடியாது. ஆனா industrywise தமிழைவிட மோசமானதெல்லாம் மும்பெயில நடந்திட்டிருக்கு.

வர்த்தகம், வியாபாரம் என்று போயிட்டம்ன்னா அதற்குள்ள values என்றது ரொம்ப கொறஞ்சிடும். மலையாள சினிமாவில ரொம்ப அற்புதமா, பிரம்மாதமா வத்திட்டிருந்த படங்களெல்லாம் குறைஞ்சிடுச்சு. தமிழ் சினிமா மாதிரியே நாலு பாட்டும் டான்சும் இருக்கனும் என்ற நிலை ஏற்பட்டிடுச்சு. மலையாள சினிமாவின் போக்கும் வருத்தத்துக்குரியாதாகத்தான் இருக்கு. ஆனா பெங்காள்ள மட்டும் ஓரளவு நல்ல சினிமா வந்திட்டிருக்கு. சுத்தி இருக்கிற நாடுகள்ள சினிமா வளரனும்னா இந்திய சினிமாவை பார்த்து வளரக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்த இயக்குநர்கள் நிறையப் பேரை பார்க்கிறேன் நான். (புன்முறுவலுடன்) என்கிட்ட வந்து சிம்ரனுக்கு callsheet கிடைக்குமான்னு கேட்கிறாங்க. (தொனியில் ஏமாற்றத்துடன்) அவங்களுக்கு நான் விடுற வேண்டுகோள் தமிழ்நாட்டில உள்ள படங்களையோ, இயக்குநர்களையோ, தமிழ் நாட்டில இருக்கிற எந்த அம்சங்களையோ பின்பற்ற வேண்டாம். ஹொலிவூட் அல்லாத உலக சினிமாவை பார்த்து அவங்க தரத்தை மேம்படுத்தனும்.

தேசம் : கோடம்பாக்க சினிமா தமிழகத்துக்கு வெளியே இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வாழும் தமிழ் சமூகத்துக்கான சினிமா வளரத் தடையாக இருந்துள்ளது எனக் கூறலாமா?

மணிமேகலை : நான் என்ன சொல்றேன்னா, தமிழ் நாட்டில தான் நிலமை மோசமாயிருக்கு. குறைஞ்சது வெளியில இருக்கிற தமிழர்களாவது தரமான சினிமாவை ஊக்குவிக்க வேண்டும். வெளியில இருக்கிற தமிழர்கள் மனசு வைக்கனும். தமிழ் நாட்டில உள்ள வர்த்தக சினிமாவை 50,000 - 100,000 புவுண் கொடுத்து வாங்கிறீங்க. நீங்க இதை செய்யாதீங்க என்கிறன்.

நீங்க இந்த வர்த்தக சினிமாவை வாங்கிறதாலை. அதை promote பண்றீங்க. அதால திரும்பத் திரும்ப இந்த hero worship, ஒரு கோடி ரூபாய் நடிகர்களுக்கு கொடுக்கிறது எல்லாம் நடக்குது. ஏன் ஒரு கோடி ரூபாய ஒரு actorக்கு கொடுக்கனும் அந்த ஒரு கோடி ரூபாயில இரு நல்ல படங்கள் செய்யலாமே.

வெளியில இருக்கிற தமிழர்கள் எல்லாருமே தரமான சினிமாவை promote பண்ணும் போது வேற போக்கு வருவதற்குரிய வாய்ப்புகள் இருக்கு. அந்த மாதிரி இளைஞர்களை, அந்தமாதிரி திரைப்படங்களை அத்தமாதிரித் துறையில work பண்ணிட்டு இருக்கிறவங்கள கண்டுபிடித்து அவங்களுக்கு fund குடுங்க, அவங்கள நல்ல தரமான படங்களை எடுக்க வையுங்க. அந்த வகையில இலங்கைத் தமிழர்கள் நல்ல தரமான சினிமாவை promote பண்ணுங்க.



நீங்க லண்டனில, சிங்கப்பூரில, மலேசியாவில இருக்கீங்க, நீங்க உலக சினிமாவை பார்க்கிற வாய்ப்புகள் நிறைய இருக்கு. தமிழ்ழை இந்த மாதிரி வரணும் என்னு நீங்க நினைக்கனும். அதை விட்டுட்டு தமிழ்நாட்ல நடத்திட்டிருக்கிறதை கொப்பி பண்ணி இங்கு கொண்டுவரனும் என்னு நினெச்சீங்கென்னா தமிழ் சினமாவைக் காப்பாற்றவே முடியாது. (என்று சற்று கடுமையாகவே எரிச்சலுடன் தனது உணர்வை வெளிப்படுத்தினார்.)

தேசம் : மாற்று சினிமா எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் என்ன? அதற்கான தீர்வு என்ன?

மணிமேகலை : Popular சினிமாவுக்கான பிடிப்பு புரையோடிப் போயிருக்கு. மக்கள தரமான சினிமாவை பார்க்க வைக்கிறது என்றதே பெரிய challenge. இந்த மாதிரி விசயங்களுக்கு தமிழ் நாட்டில null space. Zero space. ஒன்னுமேயில்ல. இடமே இல்லாத இடத்தில இருந்து விதைகள தேட வேண்டியிருக்கு. புதுசா முளைக்கனும். முளைக்கிறதுக்கான இடமே கிடையாது. அப்போ துளிர் விடுறதே பிரச்சினையாக இருக்கு.

அடுத்து பொருளாதாரம். பொருளாதாரம் என்கிறதும் zero budgetல் தான் பண்ண வேண்டியிருக்கும். யாருக்கிட்டவும் போய் மாற்று சினிமா என்று பேசினா யாருக்கும் என்ன வென்றே புரியாது. ஆவணப்படம் என்றால் ஆ? என்ன? என்பாங்க.

செலவு பண்ணி, அதை படமாக எடுத்து, இயக்கமாக்கி, தெருத் தெருவாக தனிப்பட்ட ஆளாக போட்டு காண்பித்து, அங்க இருக்கிற இயக்கங்களுடன் சேர்ந்து space ஒன்றை create பண்ணனும். நான் three yearsஆ, இதில work பண்ணிட்டு இருக்கன். எனக்கு கிடைக்கிற hope என்னென்னா, மக்கள் கிட்ட கொண்டு போறப்போ திரள் திரளா மக்கள் வந்து பார்க்கிறாங்க. எந்த வசதியுமற்ற கிராமப்புறங்கள்ள projector எடுத்திட்டுப் போய் சீலைகள், துணிகளால மறைச்சு நாங்க போட்டு காட்டும் போது சராசரியா 500 பேர் வந்து பார்க்கிறாங்க. மக்களிட்ட போகும் போது இன்றைக்கு சிறு துளியாக இருக்கிறது பெருவெள்ளமாகும் என்ற பெரிய hope கிடைக்குது.

ஒன்னு இரண்டு வருசத்தில ஈரான் சினிமா மாதிரியான ஒரு படத்தைப் பண்ணி அதை தியட்டரல யாரும் விநியோகஸ்தர் வாங்கல என்னாலும் தெருத் தெருவா கிராமம் கிராமமா அதை போட்டுக் காண்பிக்கனும் என்ற வெறியை மனசுக்குள்ள ஏற்படுத்தி இருக்காங்க மக்கள். (என புருவங்களை உயர்த்தி இமைகளில் நம்பிகை வெளிப்படக் கூறினார்.)

அதை எடுத்துட்டு போகும் போது அந்த வரவேற்பு, response, reaction, அவங்களுக்குள்ள அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனங்களை ஏற்படுத்துகிறது. கேள்விகள் கேட்கிறாங்க, சிந்தனைகளை பகிர்ந்துகிறாங்க என்ற விசயம் பெரிய திருப்தியை ஏற்படுத்துகிறது. இந்த படங்களை மக்கள் கிட்ட கொண்டு போகும் போது நிறைய possitive energy எனக்கு கிடைக்கிறது. தரமான சினிமாவைச் செய்து முதலாளிகள் கிட்ட போகாமா, முதலாளி என்கிற சுவர் இருக்கக் கூடாது. மக்களிட்ட நேரடியாகவும் ஆதரவா உள்ளவங்க ஊடாவும் போகனும். மக்கள் நிச்சயமா ஏத்துப்பாங்க.

தேசம் : Satlite தொழில்நுட்ப வளர்ச்சியுடன் காட்சியூடகங்கள் அபார வளர்ச்சி அடைந்துள்ளன. இருந்தும் மாற்று சினிமா மக்களைச் சென்றடையவில்லை. இத்தோல்விக்கு படைப்பாளிகள் முக்கிய காரணம் எனலாமா ?

மணிமேகலை : Mainstream சினிமாவில் இருக்கிறவங்கள விட மாற்று சினிமாவில் படைப்பாளிகளுடைய ஆற்றல் நல்லாத்தான் இருக்கு என்று நான் நினைக்கிறன். இதில ஒரு விசயம் என்னான்னா வர்த்தக விசயங்களை எடுத்திட்டு போறதுக்கு ஊடகங்கள் நிறைய இருக்கு. இங்கு இருக்கின்ற லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் கேட்கின்ற பார்க்கின்ற வானொலியும் தொலைக்காட்சியும் வர்த்தக சினிமாவினுடைய ad agencyகளாகத்தான் இருக்காங்க.

பார்த்தீங்கன்னா வர்த்தக சினிமா பாடல்களைத் தான் ஒலி, ஒளிபரப்புவாங்க, அந்த actorகளைத்தான் interview பண்ணுவாங்க. programming என்ற conceptரே தமிழ் தொலைக்காட்சிகளுக்கு கிடையாது.

சினிமா நிகழ்ச்சிகளைத் தவிர என்ன போடுவாங்க என்று பார்த்தீங்கன்னா, சீரியல் போடுவாங்க. சீரியல் என்றா என்ன ? சினிமாவினுடைய ரொம்ப மலிவான, ஆபத்தான பிரதி. அவங்க சொல்கிற கதைகள்ல வாற charactersயை நீங்க எங்கயுமே பார்க்க முடியாது. மிகவும் பிற்போக்குத்தனமான சீரியலைத் தான் அவங்க போட்டுக்கிட்டிருக்காங்க.

தூரதர்சன் போன்ற அரச தொலைக்காட்சிகளை எடுத்தால் அவங்க எல்லாவற்றையும் censor பண்ணித்தான் விடுவாங்க. நிஜங்களை அனுமதிக்க மாட்டாங்க. தணிக்கை இருக்கிற அரச தொலைக்காட்சிகளை நெருங்கவே முடியாது.

தனியார் தொலைக்காட்சிகள் எல்லாமே pepsi, coca cola, horlicks, colgate கொடுக்கிறதையோ தான் போடுறாங்க. மக்களை சிந்திக்க வைக்கிற எதையும் போட்டுட மாட்டாங்க. ஒரு



சிந்தனையாளரைக் கூட பேட்டி எடுக்க மாட்டாங்க. இது தான் சன்ரிவி, ராஜரிவி, ஜெயாரிவி போன்ற தமிழகத் தொலைக்காட்சிகளின் நிலை.

பத்திரிகைகளை எடுங்க சஞ்சிகைகளை எடுங்க குமுதம் எடுங்க, விகடன் எடுங்க இலக்கியத்துக்கு எத்தனை பக்கங்கள் ஒதுக்கி இருக்காங்க பாருங்க. எல்லாமே சினிமா பற்றிய செய்திகள் தான் வரும். mainstream பத்திரிகைகளும் வர்த்தக சினிமாவினுடைய agentடுகளாத் தான் இருக்காங்க. மாற்று சினிமாவுக்கோ, தரமான இலக்கியங்களுக்கோ அவங்க எத்தினை பக்கம் ஒதுக்கிறாங்க. ஒரு மாசத்தில அவங்க ஒதுக்கிற அளவைப் பாருங்க ஒரு சதவீதம் கூடக் கிடையாது. அப்படி எங்கிறப்போ, எப்படி மக்களைப் போய் அடைய முடியும். world market media rule பண்ணுது. Media முழுக்க வர்த்தக ரீதியாக இருக்கும் பொழுது இந்த விசயங்கள் எப்படி மக்களை அடைய முடியும்.

இது எதுவுமே இல்லாம மாற்று சினிமாவையோ, ஆவணப்படங்களையோ, தீவிர சினிமாவையோ பண்ணிட்டு இருக்கிற படைப்பாளிகள் எல்லாமே அவர்களின் தனிப்பட்ட முயற்சியாலே போராட்டத்தாலே தான் சின்ன விசயங்களைக் கூட அடைய முடிகிறது. அவ்வளவு பெரிய நாட்டில ஒரு தனிப்பட்ட ஆளு எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அது சென்றடைகிற சதவீதம் practicalலா குறைவாகத்தான் இருக்க முடியும். ஊடகங்கள் இதற்கு இடம்கொடுக்கிறப்போ தான் அது வீச்சாக மக்களைச் சென்றடையும். எப்படியும் அப்படி ஒரு நாள் நிச்சயம் வரும். உதவி இல்லேன்னா அது slow அடையும்.

தேசம் : தமிழகமக்கள் பெரும்பாலும் ஒரு பொழுது போக்கு சினிமா சூழலுக்குள்ளேயே வாழ்கிறார்கள். இந்நிலையை மாற்று சினிமாவால் மாற்ற முடியும் என நினைக்கிறீர்களா ? எவ்வாறு ?

மணிமேகலை : ஒரு நூற்றாண்டு கால பழக்கத்தை பயிற்சியை மாற்றுவதென்றால் கொஞ்சம் கஸ்டம். தமிழ் நாட்ல பெண்கள் dressசை கழற்றி போட்டுட்டா திரியுறாங்க? ஆனா ஹீரோயின் என்றா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் வரனும் என்று பழக்கி இருக்காங்க. ஹிரோ என்றா 20 பேரை அடிக்கிறவனா இருக்கனும். அப்படி யார் இருக்கிறான். இதெல்லாம் ஒரு ஆரோக்கியமான விசயமல்ல. அதைப் பழக்கப்படுத்தியிருக்காங்க மக்களுக்கு. இதை மாத்தியாகனும். அதுவும் படைப்பாளிகள், சிந்தனைவாதிகளுடைய மிகப் பெரிய கடமை. அது பெரிய சவாலாக இருந்தாலும் செஞ்சாகனும்.

மாற்று சினிமா என்றாலே ரொம்ப ஸ்லோவா இருக்கும். இருட்டா இருக்கும். boreingகா இருக்கும். என்றெல்லாம் ஒரு மாயையை create பண்ணி இருக்காங்க. இது சில படைப்புகளுடைய பிரச்சினையாவும் இருக்கலாம்.

வர்த்தக சினிமாவை எடுத்தால் நூறு படங்கள் வரும்போது அதன் அளவுகோலில் ஒரு படம் நல்ல படம் என்று சொல்றீங்க. மற்ற 99 படங்களும் வர்த்தக அளவுகோலில நல்ல படைப்புகள் இல்லை என்று சொல்றீங்க. ஆன மாற்று சினிமா என்று வரும் போது 100 சிறிய சினிமாவும் நல்லா இருக்கனும்ன்னு எப்படி நினைக்கிறீங்க. அதுவும் படைப்புக்கே உரிய plus, minus களுடன் தான் வரும். அதுக்காக அதையே நாம் சொல்லிட்டு இருக்க முடியாதில்ல. எல்லாப் படைப்புகளும் மக்களுக்கு பிடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எல்லா வர்த்தகப் படைப்புகளும் மக்களுக்கு பிடிப்பதில்லையே. சீரியசான சினிமாக்கள் எல்லாமே சக்ஸஸ் அடையனும்ன்னு நாங்க நினைக்க முடியாது.

தேசம் : மாற்று சினிமா எப்போதும் துன்பமாகவும் வேதனையாகவும் முடிவை முன்வைக்காததாகவும் இருக்க வேண்டும் என்பது பொது விதியா? இதற்கு என்ன தீர்வை நீங்கள் முன் வைக்கிறீர்கள்?

மணிமேகலை : அதொரு சுத்த humbug. அப்படிக் கிடையாது. நீங்கள் சொல்லிற துன்பகரமான, வேதனையான, bore அடிக்கிற என்ற எதுக்குள்ளேயும் வராம எத்தனையோ நல்ல படைப்புகள் இந்தியாவில இருக்கு. நிஜத்தில எப்படி வாழ்க்கை இருக்கோ அதைத்தான் சினிமாவில சொல்ல முடியும். ஆன light heartedஆ சிலர் சொல்றதையும் கொஞ்சம் try பண்ணலாம்.

மற்றப்படி மக்களுக்கு புரியாதது என்று ஒன்றுமே இல்லிங்க. மக்களுக்கு எல்லாமே புரியும். மக்களுக்கு புரியாது. மக்களுக்கு பிடிக்காது. இதெல்லாம் சும்மா சால்ஜாப்பு என்னுதான் நினைக்கிறேன். படைப்பாளிகளை விட மக்கள் புத்திசாலிகளா இருக்காங்க. மக்கள் முட்டாள்கள் இல்லை.

மாற்று சினிமாவை செய்திட்டு இருக்கிறவங்க எல்லாரும் சேர்ந்து ஒரு இயக்கமா செய்யனும். ஒரு industryயா form பண்ணனும். நமக்கு என்று ஒரு spaceசைக் create பண்ணனும். ஒருத்தர் படம் எடுத்தா அதை எல்லாருடைய படமா accept பண்ணனும். எல்லா ஊர்களிலேயும் நமக்கென்று ஒரு தியட்டர், அரங்கு create பண்ணனும். அத்தோட சினிமா club, library form பண்ணி அதனூடாக விடியோ, சிடிக்களை பார்க்கக் கூடியதா இருக்கும்.

Appreciation என்பதை பெரிய இயக்கமா கொண்டு வரவேண்டியிருக்கு. சினிமா என்கிறதே prostitution என்ற taboo இன்னமும் இருத்திட்டு இருக்கு. இப்போது சின்னச் சின்ன ஊர்கள்ள கூட திரைப்பட இயக்கங்கள் வந்திட்டு இருக்கு. இது ஒரு ஆரோக்கியமான விசயம்.

இடதுசாரி அமைப்புகள் நல்ல சினிமாவை promote பண்ணுவதை தங்களுடைய agendaவா எடுத்துக் கொள்ளனும். வர்த்தக சினிமாவில இருக்கிற நிறைய கலைஞர்கள் இடதுசாரி மேடைகளில் இருந்து வந்தவங்க தான். அவங்க அதை deny பண்ணலாம். ஆனா அதுதான் உண்மை.

இப்ப தமிழ் நாட்டில இருந்திட்டிருக்கிற குறும்பட, ஆவணப்பட அலையில நிறைய இளைஞர்கள் வந்திட்டிருக்காங்க. இந்த youngstersயை அடையாளம் கண்டு அவங்கள encourage பண்றது, செய்து கொண்டிருக்கிறவங்கள திரும்ப, திரும்ப ஊக்கப்படுத்துறது அவசியம்.

அதே மாதிரி உலக சினிமாவை அதாவது non hollywood சினிமாவை பார்க்கக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்திருக்கு. நிறையப்பேர் அதைப் பார்க்கிறாங்க. அது கொஞ்ச மாற்றங்களை ஏற்படுத்தும்ன்னு நினைக்கிறன்.

பேட்டியின் முடிவில், பயனுள்ளதாக அமைந்ததா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார் லீனா மணிமேகலை. அதற்கான பதிலை நீங்கள் தான் கூறமுடியும் என நினைக்கிறோம். ❑

தேசம் சஞ்சிகை கடந்த எட்டு ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது. பலதரப்பட்ட கருத்துக்களுக்கும் தளமமைத்துக் கொடுத்துள்ள இச்சஞ்சிகை வாசகர்களின் பங்களிப்பிலேயே தொடர்ந்து வெளிவருகிறது. அப்படி வெளிவருவதையே நாமும் விரும்புகிறோம். ஆகவே நீங்களும் சந்தாதாரர் ஆகுங்கள். ஏனையவர்களையும் சந்தாதாரர் ஆக்குங்கள்.

தொடர்புகளுக்கு:
Tel : 0208 279 0354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குத் தமிழனின் சுற்றுலாவும் அது ஏற்படுத்தும் சமூக அதிர்வும்



பி ரயாகரன்
tamilcircle
இணையத்தள நெறியாளர்

இலங்கையில் யுத்தத்தின் பின்னான அமைதியும் சமாதானம், பண்பாட்டுச் சிதைவை தமிழ் பிரதேசங்களில் தேசியமயமாக்கியுள்ளது. பணம் உருவாக்கிய ஆடம்பரம், அந்தஸ்த்து, திமிருடன் கூடிய வக்கிரம், சிறுகுழுவினரின் பண்பாக இருந்த போதும், அவர்களே சமூகத்தின் முழுமையையும் தீர்மானிக்கும் சக்தியாகியுள்ளனர்.

இந்த பண்பாட்டு கலச்சாரச் சிதைவு தமிழ் பிரதேசங்கள் எங்கும், இலங்கைத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களில் பொதுவாக நடக்கின்றது. இந்தச் சிதைவு பொருளாதார ரீதியான சமூக ஏற்றத் தாழ்வின் இடைவெளி அதிகரிப்பால் தேசியமயமாகின்றது. இந்த சமூக ஏற்றத் தாழ்வு பொதுவாக இரு தளத்தில் பிரதானமாக நடக்கின்றது.

1. புலம்பெயர்ந்த மேற்கு நாட்டில் இருந்து, சொந்த மண்ணுக்கு சென்று வரும் ஒரு பிரிவால் நடக்கின்றது.
2. யுத்த பொருளாதரத்தை அடிப்படையாக கொண்டு உருவான திடீர் பணக்கார பிரிவால் நடக்கின்றது.

இதுவும் மூன்று வகையைக் கொண்டது. ஒன்று தமிழ் மக்களை எல்லை இல்லாத வகையில் சுரண்டியதால் உருவானது. மற்றையது புலம் பெயர்ந்த நாட்டில் வாழ்வோரிடம் உறவை முன்நிறுத்தி உண்டியல் பணம் மூலம் உருவானது. இறுதியாக புலம் பெயர் சமூகத்துக்கு சேவை செய்வதன் மூலம், உயர் நுகர்வை பூர்த்தி செய்யும் நடைமுறை மூலம் உருவாகின்றது.

ஒட்டுமொத்தில் உலகமயமாதல் பண்பாடு இதற்கு அக்கபக்கமாக செயல்படுகின்றது. இலங்கையில் இனவாத யுத்தம் தொடங்க முன் இருந்த சமூகமும், யுத்தம் தொடங்கியவுடன் இருந்த சமூகமும் இன்று இல்லை.

இந்த சமூகப் பிளவில் போராடிய இயக்கங்களின் பங்கும் பணியும் குறிப்பாக இருந்துள்ளது. இந்த பணப் பண்பாடு போராட்ட அடிப்படையையும், போராட்டத்தில் பங்கு கொள்வோரையும் கூட தகர்க்கின்றது. அவர்களும் இயல்பாகவே அதுவாக மாறிவிடுகின்றனர். பல போராட்ட உணர்வுகள், பணப் பண்பாட்டுக்குள் தேசியமயமாகின்றது. அவற்றை இக்கட்டுரை இதற்குள் ஆராயவில்லை. சமூக அமைப்புகுள் நடக்கும் பணப் பண்பாட்டு மாற்றத்தையும், அதன் சமூச் சிதைவையும் பார்ப்போம்.

அமைதியும் சமாதானமும் மேற்கு நோக்கி புலம்பெயர்ந்த சமூகத்தின் குசியான உல்லாசப் பயணங்களை உருவாக்கியுள்ளது. சொந்த மண்ணை நோக்கி நகர்ந்துள்ள இந்த உல்லாசம், பணப் பண்பாடாகியுள்ளது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் இருந்து, இலங்கைக்கான விமானச் சேவையை இலங்கை விமானங்களே நாள்தோறும் நடத்தும் அளவுக்கு, புலம் பெயர் சமூகத்தின் உல்லாச பயணங்கள் விரிவடைந்து உள்ளது.

ஈரோ நணயங்களும், டொலர் நோட்டுகளும் தாயகத்தில் 100 மடங்கு பெறுமானமுடையதாக மாறுகின்றன. இதன் மூலம் அங்குள்ள வாழ்க்கை தரத்தை விட, 100 முதல் 200 மடங்கு நுகரும் ஆற்றலை இயல்பாகவே இவர்கள் அடைகின்றனர். அத்துடன் உல்லாச பயணமாக இருப்பதால், நுகரும் ஆற்றல் 1000 மடங்கு மேலானதாக மாறுகின்றது.

இந்த நுகரும் ஆற்றல் ஒரு சமூக அதிர்வை ஏற்படுத்துகின்றது. பணத் திமிரை ஏற்படுத்துகின்றது. ஒரு அலட்சியத்தை உருவாக்குகின்றது. எடுத்தெறியும் போக்கை உருவாக்குகின்றது. சமூக இருப்பையும் அதன் அறிவையும் கேலி செய்கின்றது. சமூகத்தை ஏறி மிதிப்பதை சமூக அந்தஸ்தாக கருதுகின்றது. உயர்மட்டக் கனவுகள் இயல்பாக நனவாக, பண்பாட்டு கலச்சார சிதைவுகள் சர்வ சாதரணமாகியுள்ளன. நுகர்வு சார்ந்த சமூக வாழ்வியல் இருப்பை, தீர்க்க முடியாத மனநோய்க்குள் வடிகாலக்கி உள்ளது. பண்பாட்டு கலாச்சார உறவுகள் லும்பன் குணாம்சமடைந்துள்ளது.

மேற்கத்தைய பண்பாட்டில் காணப்படும் ஜனநாயக விழுமியங்களை கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்ளாத புலம்பெயர் தமிழ்ச் சமூகம், நடைமுறையில் அதன் ஒரு பகுதியை அனுபவிக்கின்றது. இப்படி உணர்வுக்கும் நடைமுறைக்கும் உள்ள இடைவெளி சமூகப் பொருளாதார அடிப்படையில் புரிந்து கொள்ளப்படுவதில்லை. பணம் மூலம் கிடைத்த திடிர் சமூகத் தகுதியின் மேல், மேற்கத்தை சமூக உறவுகளை கண்முடித்தனமாக திணிப்பதன் மூலம், பல நிரந்தர மனநோயாளர்களையும், நிரந்தர சமூகப் பிளவுகளையும் ஏற்படுத்துகின்றனர்.

பல பத்து லட்சங்களை செலவு செய்யும் மனநிலையுடன் கூடிய ஆர்ப்பாட்டங்கள், அட்டகாசங்கள் புலம்பெயர் நாட்டில் இருந்து உல்லாசம் சென்றவனின் உணர்வாக, அதை வெளியில் இருந்து மக்கள் கூட்டம் அண்ணாந்து பார்க்கின்றது. மக்கள் இந்த பணக்காரக் குழுவை அண்ணாந்து பார்க்கின்றார்கள் என்பதை, இந்தப் பணக்கார குழுவும் அதன் செல்வாக்குக்கு உட்பட்ட பிரிவும் இதை

எற்றுக் கொள்வதில்லை. அப்படி அங்கு வறுமையில் மக்களா என்று விதண்டாவாதம் செய்கின்றனர்.

ஆனால் உண்மை என்ன. 2003 இன் மார்கழி மாதம் வெளியாகிய புள்ளிவிபரம் ஒன்றில் யாழ் குடாவில் 80 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பம் 5 உறுப்பினரைக் கொண்டது என்றால், 4 லட்சம் பேர் வாழ வழியற்ற வறுமைக்குள் சிக்கியுள்ளனர். மற்றொரு புள்ளிவிபரம் இதை மேலும் உறுதி செய்கின்றது. 80 ஆயிரம் குழந்தைகள் வறுமை காரணமாக வடக்கு கிழக்கில் பாடசாலைக்கு செல்லவில்லை. 65 ஆயிரம் குழந்தைகள் வறுமை காரணமாக கல்வியை இடையில் கைவிட்டுள்ளனர். இப்படி சமூகத்தின் பெரும் பகுதி வறுமைக்குள் சென்றுள்ளது.

இதை எள்ளி நகையாடும் வகையில் மறுபக்கத்தில் அட்டகாசமான வாழ்க்கை ஒன்று அரங்கேறுகின்றது. ஆடம்பரமே வாழ்கையாகிப் போன யாழ்குடா நாட்டில் 35 ஆயிரம் வாகனங்கள் இன்று ஓடுகின்றன.

மிக நெருங்கிய குடும்ப உறவுகளைத் தூக்கி எறிந்து விட்டு, உயர்தரமான ஒட்டல்களில் தங்கி நின்று தமது பெருமையைப் பீற்றுகின்றனர். இதை மையமாக வைத்து பல நவீன உல்லாச விடுதிகள், ஒட்டல்கள், சூப்பர் மாக்கற் றுகள், வெளிநாட்டவருக்கு மேற்கத்தைய பொருட்களை கொண்ட நவீன மாக்கற்றுகள், சுற்றுலா மையங்கள், விசேட குளிரூட்டப்பட்ட வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில வடக்கு கிழக்கில் பெண்களைக் கொண்ட மாசாஜ் மையங்கள் முதல் பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் எல்லைவரை சூழல் விரைவில் மாறிவிடும்.

இன்று வெளிநாட்டு தமிழனின் தேவையை பூர்த்தி செய்யும் சேவைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்க்கையும், அவனின் பொருளாதார கட்டமைப்புக்களும் உருவாகின்றது. உற்பத்தியை எடுத்தால் மேற்கு தமிழனின் தேவையை பூர்த்தி செய்யும், எற்றுமதி உற்பத்தியாக தேசிய உற்பத்தி மாறிவிட்டது. இது எகாதிபத்திய உலகமயமாதல் தேவை யை பூர்த்தி செய்யும் எல்லைவரை விரிவடைகின்றது.

பணப் பண்பாட்டை அடிப்படையாக கொண்டு சமூக அந்தஸ்து பெற்ற புலம்பெயர் தமிழன், தமது செல்வாக்குக்கு உட்பட்ட குடும்பங்களுக்குள்ளான சாதாரண பிரச்சனை ளையும் வெட்டொன்று துண்டொன்றாக கையாண்டு பிளக்கின்றனர். சொத்துகளை உரிமை கோரவும், விற்று நுகரும் சொத்துச் சண்டைகளை குடும்பங்களிடையே தொடங்கி வைக்கின்றனர். சாதிய ஆதிக்கத்தைக்கூட கிண்டி கிளறிவிடுகின்றான் புலம்பெயர்ந்த தமிழன்.

எங்கும் எதிலும் தலையிடும் இச்சுற்றலாத் தமிழ் பயணிகள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை எட்டாத உயரத்துக்கு மாற்றிவிட்டனர். சந்தையின் விலை எது தீர்மனிக்கின்றது என்று ஆராய்ந்தால், புலம்பெயர் தமிழனின் வாங்கு திறனுக்கு எற்ப மாறிவிடுகின்றது. காணி நிலம் வாங்குவதும் வீடு கட்டுவதும் வடக்கு கிழக்கில் உழைத்து வாழ்பவர்களுக்கு சாத்தியமற்ற ஒன்றாகி உள்ளது. ஏழைகளின் நுகர்வு என்பது முற்றாக அலட்சியமாகியுள்ளது. மீன் சந்தையில் ஏலம் கூறும் போது, சுற்றுலா சென்றவர் சாதாரண சந்தை விலையை விட அதிகமாக ஒரே கேள்வியில் வாங்கி விடுகின்றான். இது வாழும் மக்களின் வாழ்க்கையை கடினமாக்குகிறது. இதற்கு எதிரான வெறுப்பு பல தளத்தில் வெளிப்படுகின்றது. உதாரணமாக வீதிகளில் செல்லும் இளைஞர்கள் அக்க பக்கமாக சென்று வாகனங்களுக்கு வழிவிட மறுக்கும் போது, அவர்கள் கூறும் காரணம் காரில் வருவோர் வெளிநாட்டவர்கள்.

மறுபுறம் புலம்பெயர் சமூகம் உருவாக்கிய இந்த பகட்டு வாழ்க்கையை மிஞ்சும் வகையில், யுத்த பொருளாதாரத்தை பயன்படுத்தி உருவான திடீர் பணக்கார கோடீஸ்வரர்கள் குழு ஒன்று வடக்கு கிழக்கில் உருவாகியுள்ளது. இவர்களின் வாழ்க்கைத் தரத்துடன் கூடிய ஆடம்பரங்களும் பகட்டுத் தனங்களும் புலம்பெயர் தமிழ் சுற்றுலாப் பயணிகளால் கூட வாழ முடியாத வகையில் உள்ளது. புலம்பெயர் தமிழன் மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு அது உள்ளது.

இந்த திடீர் பணக்காரக் குழு யுத்த நெருக்கடியை தனக்கு சாதகமாக்கி, இராணுவம் மற்றும் புலிகளுக்கு பணத்தை லஞ்சமாக கொடுத்து பொருட்களை கடத்தி வருவதன் மூலம், அத்தியாவசிய பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் மேலான தட்டுப்பாட்டை பணமாக்கினர். லஞ்சங்கள், வரிகள் எதுவாக இருந்த போதும், அவற்றை மக்களின் தலையில் சுமத்தியதன் மூலம், இலகுவாக லாபங்களை பல மடங்காக்கினர்.

சுற்றுலாப் பயணிகளின் நுகர்வுகளை பூர்த்தி செய்யும், பணப் பண்பாட்டுக்கு இசைவான சந்தைப் பொருளாதாரத்தை இந்த திடீர் பணக்காரக் குழு உருவாக்கி, அதையும் கட்டுப்படுத்துகின்றது.

மனித சமூக உறவுகள் சிதைந்து, அதற்கு பதில் பண உறவுகள் முதன்மை அடைந்துள்ளன. அறிவு, முதுமை, சமூக ஆற்றல், அனுபவம், பெரியவர்கள் என்ற வடிவில் நீடித்த சமூக அந்தஸ்தும், சமூக பண்பும் மறுக்கப்படுகின்றது. மாறாக பணம் சார்ந்த அந்தஸ்தும் பண்பும் திணிக்கப்படுகின்றது. சமூக கண்ணோட்டம் சிதைந்து சுயநலம் முதன்மை பெறுகின்றது. லும்பன் வாழ்க்கை முறையுடன் கூடிய பண்பை, இந்தப் பணப் பண்பாடு சமூகப் பண்பாடாக்குகின்றது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவுகளில் இதுவும் ஒன்றாகியுள்ளது.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் பல பத்தாயிரம் உயிர் தியகங்களுடன் நடக்கின்ற அதே மண்ணில், நடந்து வரும் பண்பாட்டு, கலாச்சார சிதைவு ஒரு இனத்தின் அடிப்படையையே அழிக்கின்றது. பாரிய உளவியல் சிக்கலை இது உருவாக்குகின்றது. தற்கொலைகளையும், மன நோய்களையும், குடும்பச் சிதைவுகளையும், சமூகப் பிளவுகளையும் நிரந்தரமாக்குகின்றது. அமைதி சமாதானம் என்று தொடாகின்ற சூழ்நிலையில், இது அவலமாக பிரதிபலிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுக்களில் உலகளாவிய அளவில் புரட்சிகர சக்திகளுக்கு நம்பிக்கையூட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றன. சீனாவில் இடம்பெற்ற கலாச்சாரப் புரட்சி; லத்தீன் அமெரிக்காவில் சேகுவேராவின் புரட்சிகர நடவடிக்கைகள்; வியட்நாமில் அமெரிக்கப்படைகளின் தோல்வி என்பன ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதப்போராட்டங்கள் முளைவிடுவதற்கு ஊக்கியாக அமைந்தது. இக்காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டமும் முளைவிட்டது. அதே காலப் பகுதியில் இந்தியாவிலும் அரசுக்கு எதிராகவும்; நிலவுடமையாளர்களுக்கு எதிராகவும் ஆயுதப்போராட்டங்கள் தளிர்விட்டது.

அருகருகே முளைவிட்ட இப்போராட்ட சக்திகள் நெருங்கிச் செயற்படத் தவறின. மாறாக ஈழப் புரட்சிகர அமைப்புகள் இந்திய புரட்சிகர அமைப்புகளுக்கு எதிரான இந்திய ஒடுக்குமுறை அரசுடனே சமரசம் செய்து கொண்டன. இந்திய உளவுத்துறையான ரோவுடன் அவர்கள் தொடர்புகளை வளர்த்துக் கொண்ட அளவுக்கு அங்கிருந்த புரட்சிகர சக்திகளைக் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

ஈழப் புரட்சிகர அமைப்புகள் தமது இராணுவ சாகசங்களில் அதீத நம்பிக்கை கொண்டு தத்துவார்த்த விடயங்களை முற்றிலும் கைவிட்டனர். மறுமுனையில் இந்திய புரட்சிகர அமைப்புகள் இராணுவ ரீதியாக பாரிய வெற்றிகளைக் காணாத போதிலும் தத்துவார்த்த ரீதியாக தம்மை தக்கவைத்துக் கொண்டுள்ளன.

அரசியல் தெளிவற்ற அமைப்பால்; இராணுவத்தால் விடுதலைப் போராட்டத்தை ஒரு தளத்துக்கு மேல் நகர்த்த முடியாது என்பதற்கு உதாரணமாக ஈழப் போராட்டம் மாறி வருகிறது. ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆதரவு சக்திகளாக இருக்க வேண்டிய இந்திய மக்கள்; மலையக மக்கள்; முஸ்லீம் மக்கள்; சிங்கள மக்கள் யாரையுமே ஈழவிடுதலைப் போராட்டம் வென்றெடுக்கவில்லை. ஆயுதங்கள் மட்டுமே வென்றெடுக்கப்பட்டது அல்லது கறுப்புச் சந்தையில் வாங்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களிலேயே பல்வேறு பிரிவினர் அந்நியப்படுத்தப்பட்டு உள்ளனர்.

ஆரம்பம் முதல் இன்று வரை சகோதரப்படுகொலைகளின் இரத்தத்தில் தமிழீழப் போராட்டம் மூழ்கிக்கொண்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் எமக்கு அருகில் எம்முடன் தளிர்விட்ட சகோதர புரட்சி அமைப்பின் போராட்டத்தை நோக்குவது பயனுள்ளதாக அமையும் என எண்ணுகிறோம்.

### ஆந்திரபிரதேசில் இருந்து நேபாளம் வரை

# அமெரிக்காவின் அச்சம்

# தெற்காசியாவில் தொடரும் புரட்சி

பொ சிவக்குமார்




அறுபதுகளின் இறுதியில் "நக்சல்பாரி" சூறாவளியாகி ஆளும் வர்க்கங்களைக் குலை நடுங்க வைத்தன. சீனாவின் பீகிங் வானொலி நக்சல்பாரிகளின் ஆயுதப் போராட்ட எழுச்சியை "வசந்தத்தின் இடிமுழக்கம்" என்று வர்ணித்தது. விவசாயிகள் அரசுக்கு எதிராகவும், நில உடமையாளர்களுக்கு எதிராகவும் ஆயுதம் தாங்கிப் போராடினார்கள். 70களில் மிகுந்த அடக்குமுறைக்கு உட்பட்ட இந்த அமைப்பைச் சார்ந்த பல்லாயிரக்கணக் கான பேர் கொல்லப்பட்டனர். 1972இல் இதன் தலைவர் சாரு மஜூம்தார் மேற்கு வங்காள காவல்துறையினரால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். இவ்வமைப் பின் தலைமைக் குழுவில் இருந்தவர்கள் பலரும் கொல் லப்பட்டதுடன் சிலர் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

இச்சூழலில் இவ்வமைப்பின் மையக்குழு நொருங்கிப் போன நிலையில், 1980களில் இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிச, லெனினிச கட்சி) : மக்கள் யுத்தம் என்ற கட்சி கொண்டபள்ளி சீத்தாராமையா தலைமையில் உருவானது. ஆந்திரா, தமிழ்நாட்டில் உள்ள புரட்சிகர சக்திகள் இந்தக் கட்சியில் இணைந்தன. பிறகு ஓரிஸ்ஸா மற்றும் மஹாராஷ்டிரா பகுதிகளில் மக்கள் யுத்தம் விரிவடைந்தது. தலித், பழங்குடியினர் மற்றும் ஒடுக்கப் பட்ட மக்களுக்காகத் தொடர்ந்து போராடி வந்துள்ள இவ்வமைப்பு இதுவரை பல்வேறு அடக்குமுறைகளையும் சந்தித்துள்ளது. இருப்பினும் முந்தைய அனுபவங்களி னால் ஏற்பட்ட படிப்பினைகளில் இருந்து புரட்சிகர கெரில்லா போராட்டத்தை மிகப்பெரும் அளவில் இன்று வளர்த்தெடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உறுதியான போராட்டத்தின் விளைவாக இன்று பல்வேறு மாநிலங்களிலும் இவ்வமைப்பு விரிவடைந் துள்ளது. இவ்வமைப்பு தனது போராட்டப் பகுதிகளில் கூலி, ஏழை விவசாயிகளுக்குப் பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைக் கைப்பற்றி, விநியோகிப்பதில் வெற்றியடைந்துள்ளனர். முன்னாள் பிரதமர் பீ.வீ.நரசிம்மரா விற்கு கர்நாடக மாநிலத்தின் கரீம்நகர் பகுதியில் சொந்த மாக இருந்த பத்தாயிரம் ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட்டு அங்குள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. சிங்கரேணி நிலக்கரி தொழிலாளர்களின் போராட்டம் இக்கட்சியின் செல்வாக்கு தொழிலாளர்களின் மத்தியில் பெருமளவு உள்ளதை நிரூபித்துள்ளது.

மேலும், இந்திய அரசை எதிர்த்துப் போராடவும், பிரிவினை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தேசிய இனங்களின் போராட்டத்தைத் தொடர்ந்து ஆதரிக்கவும், சமூக ஒடுக்குமுறைகளை, குறிப்பாகத் தீண்டாமை மற்றும் சாதியத்தை எதிர்த்துப் போராடவும், இந்து பாசிசத்திற்கு எதிராகவும், அனைத்து மத அடிப்படைவாதங்களை எதிர்த்துப் போராடவும் ஆங்காங்கு செயற்பட்டுவந்த ஆயுதம் தாங்கிய மார்க்சிய, லெனினிய அமைப்புக்களை ஒன்றிணைக்கும் விதமாக மக்கள் யுத்த அமைப்பின் முயற்சியில் பீகாரில் செயற் பட்டு வந்த கட்சி ஐக்கியம் (Party Unity) அமைப்பு 1995இல் மக்கள் யுத்த கட்சியுடன் இணைந்தது.

1969களில் கனாய் சட்டர்ஜி தலைமையில் செயற்பட்டு வந்த இந்திய மாவோயிஸ்ட் கம்யுனிஸ்ட் மையம் (MCCI) எம்.சீ.சீ.ஐ ஆயுதப் போராட்டத்தை கொண்டு செல்ல அஸ்ஸாம் - திரிபுரா பகுதிகளின் கிராமப்புறங்களில் வேலைகளைத் தொடங்கியது. அனுபவமின்மையாலும், தீவிரஅடக்குமுறை ஏவப்பட்டதாலும், அங்கிருந்து பின் வாங்கி 1973களில் மேற்குவங்கப் பகுதிகளில் இயங்கினர். பல்வேறு அடக்குமுறைகளுக்கும், இழப்புகளுக்கும் மத்தியில் விவசாயப் போராட்டத்தை மிகப்பெரும் அளவில் முன்னெடுத்துச் சென்றனர். இதுவரை 50,000 ஏக்கர் நிலங்களைக் கைப்பற்றி மக்களுக்கு விநியோகித்து உள்ளனர். அரசுக்கும் நிலச்சுவாந்தர்களுக்கும் ஆதரவான தனியார் இராணுவப் படைகளை (சதேந்திரசேனா, சன்லைட் சேனா, ரன்பீர் சேனா) அழித்துள்ளனர்.

இவ்வமைப்பு உத்தரப் பிரதேசம், சத்திஸ்கார், மற்றும் ஒரிஸ்ஸா எல்லைப் பகுதிகளிலும், பஞ்சாப், டெல்லி, ராஜஸ்தான், வடபீகார், உத்தரகண்டில் பகுதிகளிலும் இவர்கள் தங்கள் செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளனர். MCCI யும், மக்கள் யுத்தக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தை 1981இல் நடைபெற் றது. பிறகு பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளில் மாறுபட்ட கருத்தின் காரணமாக இப்பேச்சுவார்த்தை முறிந்து போனது. 1995இல் இவ்விரு அமைப்புகளும் நெருடலான சூழல்களை எதிர்கொண்டனர். 2003இல் மீண்டும் ஐக்கியத்தின் தேவையைக் கருதி தங்களின் பேச்சுவார்ததையைத் தொடங்கியபோது தமது அமைப்புக



ளில் இருந்து வந்த தவறான கண்ணோட் டத்தை பகிரங்கமாக அறிவித்து மக்களிடம் மன்னிப்புக் கோரியது.

இந்தியாவில் இது வரை இருபெரும் ஆயு தப் போராட்ட அமைப்பு களாகச் செயற்பட்டு வந்த இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிச,லெனினிச கட்சி), மக்கள் யுத்தம் மற்றும் இந்திய மாவோயிஸ்ட் கம்யுனிஸ்ட் மையம் (MCCI) - இவை இரண்டும் கடந்த ஆண்டு செப்டெம்பர் 21ம் திகதியன்று இணைந்து, ஒன்றுபட்ட இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைப்பாகியதாக அறிவித்து உள்ளது.

இவ்வமைப்புகளின் இந்த நடவடிக்கை மக்கள் இவ்வமைப்புகளின் மீது வைத்திருந்த நம்பிக்கையையும், இவ்வமைப்புகளின் நேர்மையையும் வெளிக்காட்டுவதாக இருந்தது. சர்வதேசிய அளவில் மாவோயிஸ்ட் அமைப்பி னர் இவர்களின் நடவடிக்கைகளை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். இந்த இரு அமைப்புகளும் இணைந்து ஒன்றுபட்ட இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) ஆக உருவாகியதுடன், இராணுவரீதியில் தங்களது பகுதிகளில் வலிமையடைந்துள்ளதைக் கண்டு இந்திய அரசு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியது. மாவோயிஸ்டுகள் உருவாக்கியுள்ள மக்கள் விடுதலை கெரில்லா இராணுவம் (PLGA) இந்திய அரசுக்கு பலத்த சவாலாக உள்ளது.

மாவோயிஸ்டுகள் மீது இந்திய அரசு இதுகாலம் வரை துணை இராணுவப்படை மற்றும் CRPF, EFR, RAF, SAF மற்றும் STF போன்ற படைகளைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான படுகொலைகளை நடத்தி வந்துள்ளது. சமீபகாலங்களில் இப்படைகளுக்கு எதிராக மக்கள் விடுதலை கெரில்லா தாக்கதல் அதிகரித்துள்ளது. இதுவரை காலமாக மௌனம் சாதித்துவந்த ஊடகங்கள் இன்று வேறுவழியின்றிச் செய்திகளை "தனக்கேயுரிய நடையில்" வெளியிட்டுவருகின்றன.

மேற்கு வங்கத்தில் பேல்பெகாரி தாக்குதல், ராம்கர் வனப் பகுதியில் நடந்த தாக்கதல்கள், கர்நாடக மாநிலத் தில் மகேபைல் தாக்குதல், உத்தரப்பிரதேச சாந்தௌலி தாக்குதல்கள் (The Hindu 21.11.2004) பற்றியும், துணை இராணுவப் படைகளின் இழப்புகளையும், ஆயதப் பறி முதல்களையும் பற்றிய செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்திய மத்திய அரசின் "அறிவுரையின்" கீழ் ஆறு மாநிலங்களைச் சேர்ந்த மாநில முதல்வர்கள் பேச்சுவார்த் தைக்கு இவ்வமைப்புகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்தியாவில் இவ்வமைப்புக்கள் பொடா சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த அதே நேரத்தில் இவ்வியக்கங்கள் மீது தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்சலைட்டுகள் : காலக் குறிப்பு

1948 - தெலுங்கானப் போராட்டம் இடம்பெற்றது. அதே காலப்பகுதியில் ஆந்திராவில் மாஓ சேதுங்கின் வழியில் இந்தியப் புரட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

1964ல் கருத்தியல் ரீதியாக இந்திய கம்யுனிஸ்ட் கட்சியில் (CPI), இருந்து இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) - CPI(M), பிரிந்து சென்று தேர்தல் களத்தில் குதித்தது.

1965 - 66 காலப்பகுதியில் கம்யுனிஸ்ட் தலைவர் சாரு மஜும்தார் மார்க்ஸ் - லெனின் - மாஓ சிந்தனைகளின் அடிப்படையில் பல்வேறு கட்டுரைகளை வெளியிட்டார். இதுவே பின்நாளில் வரலாற்றுப் பதிவான 8 ஆவணங்கள் ஆகும். அதுவே நக்சல்பாரிகளின் தத்துவமானது.

1967 மார்ச் முதல் மே வரை சாரு மஜும்தார் தலைமையில் விவசாயிகள் கிளர்ச்சி இடம்பெற்றது. 72 நாட்கள் இடம்பெற்ற கிளர்ச்சியில் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் 9 விவசாயிகளும் கொல்லப்பட்டனர்.

இக்கிளர்ச்சியே நக்சலைற் இயக்கத்தின் உதயம். அது ஏனைய பகுதிகளுக்கும் பரவியது.

1968 தமிழ்நாடு, கேரளா, உத்தரப்பிரதேஷ், பீகார், கர்நாடகா, ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய பகுதிகளில் உள்ள புரட்சிகர சக்திகள் இணைந்து எஸ் ரோய் சவுத்ரி தலைமையில் All India Coordination Committee of Communist Revolutionaries (AICCCR) அமைப்பு உருவாக்கப்பட்டது.

1969 லெனின் பிறந்ததினமான ஏப்ரல் 22ல் AICCCR அமைப்பு, புதிய கட்சியை தோற்றுவித்தது. இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிய-லெனினிஸ்ட்) CPI (LM) என பெயரிடப்பட்டது. அதன் தலைமைச் செயலராக சாரு மஜும்தார் தேர்ந்தெடுக்கப்பட்டார். CPI(LM) நடத்திய கட்சி அறிவிப்புக் கூட்டத்தை ஆட்சியில் இருந்த CPI(M) கலைக்க முயற்சித்தது. இதற்கிடையே உத்திரபிரதேஷ், மேற்கு வங்கம், ஆந்திரப்பிரதேஷ் (ஸ்ரீகாகுளம் பகுதி) மாநிலங்களின் சில பகுதிகள் CPI(LM) போராளிகளின் பிடியில் வீழ்ந்தது.

அதே ஆண்டு ஒக்ரோபர் 20ல் கனாய் சட்டர்ஜி தலைமையில் இந்திய மாஓஸ்ட் கம்யுனிஸ்ட் மையம் Maoist Communist Centre India MCCI உதயமானது. அவர்கள் நக்சலைற்களின் போராட்டத்துக்கு ஆதரவளித்த போதும் சில கொள்கை முரண்பாடுகள் காரணமாக CPI(LM) உடன் இணையவில்லை.

1970 செப்ரம்பர் - ஒக்ரோபர் பகுதியில் CPI(LM) யை தமிழ் நாட்டில் நிறுவிய தோழர் அப்பு ஸ்ரீகாகுளம் கிளர்ச்சியில் கொல்லப்பட்டார். இக்கிளர்ச்சி 1975 வரை நீடித்தது.

1972 யூலை 16ல் சாரு மஜும்தார் கல்கத்தாவில் வைத்து கைது செய்யப்பட்டார். அன்று சித்திரவதைக்கு பெயர்பெற்ற லால் பசார் பொலிஸ் நிலையத்தில் கோரமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு யூலை 28 அதிகாலை 4 மணியளவில் சாரு மஜும்தார் உயிரிழந்தார். அக்காலப்பகுதியில் 12 மத்தியகுழுத் தலைவர்கள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர். CPI(LM) ன் மத்திய குழு செயலிழந்தது.

1973 கொண்டபள்ளி சீத்தராமையா கட்சியை மீளவும் ஒழுங்கமைத்தார்.

1979 - 1988 வரை MCCI பீகாரில் திவிரமாக இயங்கியது.

1980 கொண்டபள்ளி சீத்தாராமையா ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் யுத்தக் குழுவை People's War Group - PWG நிறுவினார்.

1982 MCCI இன் ஸ்தாபகர் கனாய் சட்டர்ஜி காலமானார்.

!986ல் PWG, MCCI ஆகிய இரு அமைப்புகளையும் பீகார் அரசு தடைசெய்தது.

1992 ஆந்திரப் பிரதேஷ் அரசு PWGயை தடைசெய்தது.

1999 CPI(ML)Party Unity என்ற அமைப்பு PWG உடன் இணைந்து கொண்டது.

2001 Coordination Committee of Maoist Parties and Organisations of South Asia (CCOMPOSA) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் இலங்கை, இந்திய, பங்களாதேஷ், நேபாள் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாஓவாதக் கட்சிகள் இணைந்துள்ளன.

2003 PWG உம் MCC உம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது.

2004 PWG, MCC ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து ஒன்றுபட்ட இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) என அறிவித்து உள்ளன. இவர்கள் நேபாளில் நடைபெறும் போராட்டத்துக்கு கருத்தியல் ரீதியாவும் இராணுவ ரீதியாகவும் முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் : மக்கள் யுத்தக் குழுவினர் அணிவகுத்துச் செல்கின்றனர்.



தாக்குதல்களும் அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் அதன் மாநிலக் குழு செயலர் சகேத்ராஜன் "மோதல்" என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிறந்த அறிவுஜீவியான இவர் கர்நாடக வரலாறு பற்றி எழுதிய **'Making History'** என்ற நூல் பல்கலைக்கழகத்தில் பாடநூலாக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவில் பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடுத்த காங்கிரஸ் அரசு, நக்சலைட்டுகள் வன்முறையாளர்கள் என்றும் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு கிடையாது என்றும் பிரச்சாரத்தை அவிழ்த்துவிட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு ஜுலை 28இல் நடைபெற்ற இக்கட்சியின் முதலாவது வெளிப்படையான கூட்டத்தில் இலட்சக்கணக்கில் மக்கள் கலந்துகொண்டனர். "அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களால் தொடுக்கப்பட்ட கடும் ஒடுக்குமுறைகளால் மறைக்கப்பட்டிருந்த மக்கள் யுத்தத்தின் பிரபல்யம், நீர்த்துப் போகவில்லை என்பது இக்கூட்டத்தின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது" என ஜுலை 29ம் திகதி இந்து பத்திரிகை எழுதியது.

தமிழகத்தில் உள்ள ஜெயலலிதா அரசு, இவ்வமைப்பின் மீது அடக்குமுறையை அவிழ்த்துவிட்டதுடன் போதிய நிதியையும் நவீன ஆயுதங்களையும் வழங்க வேண்டி மத்திய அரசுக்கு கோரிக்கையும் விடுத்துள்ளது.

உலகத்தின் **Big Brother** ஆக வலம் வரும் அமெரிக்காவின் கவனம் தெற்காசியா மீது குவிந்துள்ள இவ்வேளையில், நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் கை ஓங்கி வருவதையும், இந்தியாவில் தோன்றியுள்ள மாவொயிஸ்டுகளின் ஐக்கியம் மற்றும் தெற்காசிய அளவில் புரட்சிகர அமைப்புகளிடையே வளர்ந்துவரும் நம்பிக்கையையும் கண்டு அமெரிக்கா அச்சம் கொண்டு உள்ளதுடன் மாவோயிஸ்டுகளை ஒடுக்க நேபாளத்திற்கும் இந்தியாவிற்கும் உதவுவதாக அறிவித்துள்ளது. அதன்படி அமெரிக்கா கடந்த எப்ரல் 28 அன்று வாஷிங்டனில் வெளியிட்ட **OSTO (Other Selected Terrorist Organisations)** பட்டியலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) இயக்கத்தையும் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்துள்ளது. ❑

## நக்சலைட்டுகள் :

நக்சலைட்டுகள்; நக்சல் பாரிகள்; நக்சலிசம் என்ற எந்தப் பதங்களும் 1967 மார்ச் மாதத்திற்கு முன் அறியப்பட்டிருக்கவில்லை. 1967 மார்ச் – மே; மேற்கு வங்கத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிக்குப் பின் இப்பதங்கள் இந்தியாவில் மட்டமல்ல உலக அளவிலும் அறியப்பட்டது.

1967 மார்ச் 2ம் திகதி மேற்கு வங்கத்தில் டார்ஜிலிங் மாவட்டத்தில் உள்ள நக்சல்பாரி என்ற கிராமம். அங்குள்ள ஆதிவாசி இளைஞன் விமல் கேசன். தனது நிலத்தை உழுவதற்கு அப்பிரதேச நீதித்துறை விமல் கேசனுக்கு அனுமதி வழங்கியது. ஆனால் அக்கிராம நிலச்சுவாந்தர்கள் நில உரிமையாளர்கள். விமல் கேசனை தனது நிலத்தில் உழுவதற்கும் உரிமை பாராட்டவும் அனுமதிக்காமல் அவனை அடித்துத் துன்புறுத்தினர்.



ஆதிவாசிகளும் விவசாயிகளும் கொதித்தெழுந்தனர். ஏற்கனவே அங்கு புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சாரு மஜும்தார் (படம்) தீவிரமான ஒரு கிளர்ச்சிக்கு தயாரானார். அடக்கப்பட்டு; ஒடுக்கப்பட்ட நக்சல்பாரி மக்கள் கிளர்ந்தெழுந்தனர். விமல் கேசனுடைய நிலத்தை மட்டுமல்ல தாங்கள் பறிகொடுத்த நிலங்களையும் சாரு மஜும்தாரின் தலைமையில் நக்சல்பாரி மக்கள் மீட்டெடுத்தனர்.

கிளர்ச்சி 72 நாட்கள் தொடர்ந்தது. ஒரு சப் இன்ஸ்பெக்ரர்; ஒன்பது விவசாயிகள் அல்லது ஆதிவாசிகள் இக்கிளர்ச்சியின் போது கொல்லப்பட்டனர். நக்சல்பாரி மக்களின் அக்கிளர்ச்சியே பின்நாளில் அவ்வகையான நிலச்சுவாந்தர்களுக்கு எதிரான போராட்டங்களுக்கும் தத்துவங்களுக்கும் முன்னுதாரணமாகவும் அமைந்தது.

இந்தியாவின் 12 மாநிலங்களில் 125 மாவட்டங்களை நக்சல்பாரிகள் என்று பொதுவாக அழைக்கப்படும் இடதுசாரி ஆயுத அமைப்புகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளன. தமிழ் நாட்டில் இருந்து நேபாள் வரை தமக்கென ஒரு வழிப்பாதையை தமது பிடியில் கொண்டுள்ள இவர்கள் இன்னும் 80 மாவட்டங்களுக்கு தமது பிடியை விஸ்தரிக்க திட்டமிட்டு உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ் பாலச்சந்திரன்



ஸ்டாலின்



ட்ரொஸ்கி

ட்ரொஸ்கியவாதம் ஒரு பார்வை:

# தோல்விகண்ட ட்ரொஸ்கிய வாதமும் ஏற்றுக்கொள்ளாத விதண்டாவாதிகளும்

ஒரு தத்துவம் என்ற முறையில் ட்ரொஸ்கியவாதம் ஒரு செத்த குதிரைக்கு ஒப்பானது. ஆனால் அது இன்னமும் சில இடங்களில் முக்கி முனகிக் கொண்டு இருக்கின்றது எனலாம். இந்த முக்கல் முனகல்களை ஏதோ பெரிய முழக்கங்களாகக் காட்ட சிலர் முனைகின்றனர். ஆனால் அவர்கள் எவ்வளவுதான் தலை கீழாக நின்று முயற்சி செய்தாலும் அவர்களின் கனவு ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை.

ட்ரொஸ்கியவாதத்தின் இன்றைய வக்கீல்கள் இதனைப் பற்றி அவ்வளவாக பேச விரும்பாவிட்டாலும் தனியொரு நாட்டில் மட்டும் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியுமா என்பதே ட்ரொஸ்கியவாதிகளுக்கும் கம்யூனிசவாதிகளுக்கும் இடையிலான பிரதான பிரச்சனையாக இருந்தது. இன்று சோஷலிசத்தை ஒரே நாட்டில் கட்டியமைக்க முடியுமா என்பது போன்ற கேள்விகள் முற்றிலும் பொழுது போக்கற்ற அறிவுஜீவிகளின் விவாதத் தலைப்புகளில் இடம் பிடிப்பவை.. அதனைச் செய்ய முடியும் என்பதை ஸ்டாலின் உலகிற்கு நிரூபித்தார்.

பாட்டாளிவர்க்கப் புரட்சியின் யுத்தத்திட்டம் என்பதில் லெனின் பின்வருமாறு கூறினார். "முதலாளித்துவத்தின் வளர்ச்சி பல்வேறு நாடுகளில் மிகுதியும் சமாந்திரமற்ற முறையில் நடைபெற்றது. பண்ட உற்பத்தி அமைப்பின் கீழ் வேறுவிதமாக அது நடைபெறமுடியாது. இதிலிருந்து சோசலிசம் சகல நாடுகளிலும் ஏக காலத்தில் வெற்றி பெறமுடியாது என்பது புலனாகிறது. அது முதலில் ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளில் வெற்றி பெறும்".

இந்த லெனிசக் கருத்துக்களின் அடிப்படையில் முதலில் லெனினாலும் பின்னர் அவருடைய வாரிசான ஸ்டாலினாலும் தலைமை தாங்கப்பட்ட போல்ஷ்விக் கட்சி புரட்சி வெற்றி பெற்ற ஒரு நாட்டில் சோசலிச உற்பத்தியை ஒழுங்குபடுத்தியது. வரலாறு அது சரி என நிரூபித்துவிட்டது.

ஆனால் ட்ரொஸ்கி வேறுவிதமாக சிந்தித்தார். பின்தங்கிய ரஸ்சியாவில் பாட்டாளிவர்க்கப் புரட்சி தப்பிப் பிழைப்பதை அவர் முன்னேறிய நாடுகளில் தொழிலாளர்களின் புரட்சிப் போராட்டத்தின் வெற்றியுடன் இணைத்தார். அவர் "உலகப் பாட்டாளிவர்க்கப் புரட்சி என்ற அரங்கில்தான் ரஸ்சியப் புரட்சியைக் காப்பாற்ற முடியும்" என்று ஆடம்பரமாகப் பிரகடனம் செய்தார்.

விவசாயிகளின் புரட்சிகர உள்ளார்ந்த சக்தியின் மீது நம்பிக்கை வைக்காததே ட்ரொஸ்கியின் இந்த தவறான தாக்கத்திற்கு அடிப்படைக் காரணம் ஆகும். புரட்சி சோசலிசக் கட்டத்தை நோக்கி நகரும் போது பாட்டாளி வர்க்கத்திற்கு பூர்ஷ்வா வர்க்கத்துடன் மட்டுமல்ல விவசாயிகளுடனும் மோதல் ஏற்படும் என அவர் கருதினார். அதனால் அவர் இவ்வாறு கூறினார் "....பாட்டாளி வர்க்க முன்னனிப் படை அதன் வெற்றியை அடையப் பெறுவதற்காக அதன் ஆட்சியின் அதி ஆரம்பக் கட்டத்திலேயே நிலப்பிரபுத்துவ சொத்தைப் பறிப்பது மட்டுமல்ல முதலாளித்துவ சொத்தையும் பறிக்க நேரிடும். இதில் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் போராட்டத்தின் முதல் கட்டங்களில் தனக்கு ஆதரவளித்த பூர்ஷ்வா வர்க்கத்துடன் மட்டுமல்ல தன்னை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு காரணமாயிருந்த பரந்துபட்ட விவசாயிகளுடனும் பகைமையான மோதலில் ஈடுபட நேரிடும்".

லெனினுடைய கருத்துக்கள் ட்ரொஸ்கியின் கருத்துக்களுக்கு நேர் எதிர்மாறானவை. ரஸ்சிய மக்கள் தொகையில் பெரும்பான்மையினரான விவசாயிகளுக்கு புரட்சியின் இரண்டு கட்டங்களிலும் புரட்சிப் பாத்திரம் உண்டு என்று லெனின் வாதிட்டார். இந்த விவசாய மக்களை தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஒழுங்குபடுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே விவசாயிகளுடனான கூட்டணியில் நம்பிக்கையற்ற ட்ரொஸ்கியால் ரஸ்சியப் புரட்சிக்கு எந்த எதிர்காலத்தையும் காண முடியவில்லை. அவருடைய கருத்தில் உலகப் புரட்சிதான் அதைக் காப்பாற்ற முடியும். ஆனால் அது நடைபெறவில்லை. ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியாது என அவர் கூறிக் கொண்டே இருந்தார். ஆனால் ஸ்டாலின் தலைமையிலான போல்ஷ்விக்கள் ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியும் என்பதை நிரூபித்ததுடன் சோவியத்யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பின் போது கட்டவிழ்த்து விடப்பட்ட வரலாறு காணாத கொடிய தாக்குதலுக்கு எதிராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பாதுகாத்தார்கள். வரலாறு இவ்வாறு இந்தப் பிணக்குகள் பற்றிய தீர்ப்பை வழங்கி முன்னேறிச் சென்றது.

அடுத்து லெனினின் வாரிசு என்ற பிரச்சனையிலும் ஸ்டாலின் ட்ரொஸ்கியின் இடத்தை அபகரித்தார் என்ற ட்ரொஸ்கியவாதிகளின் பிரச்சாரத்தில் எள்ளவும் உண்மை இல்லை என்பதை நாம் தெளிவாக காணலாம். வரலாற்றின் படி ட்ரொஸ்கி புரட்சிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்தான் போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்து கொண்டார். ஆனால் ஸ்டாலினோ 1912ல் பிராக் மாநாட்டில் மென்ஷிவிக்குகளிடம் இருந்து பிரிந்த போது போல்ஷ்விக் கட்சியில் லெனினுடன் இணை ஸ்தாபகராக இருந்தார். இந்த மாநாட்டில் ஸ்டாலின் மத்திய கமிட்டிக்கு தெரிவு செய்யப்பட்டார். மேலும் ரஷ்யாவுக்குள்ளே புரட்சிகர வேலைக்கு வழிகாட்டுமுகமாக ஸ்டாலினை தலைவராகக் கொண்ட மத்தியக் கமிட்டி ரஷ்யசபை என்ற நடைமுறையான கேந்திரம் அமைக்கப் பட்டது. இது ஸ்டாலினுடைய தலைசிறந்த ஸ்தாபன திறமைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். லெனின் பெரிதும் வெளிநாடுகளில் இருந்து இயக்கத்திற்கு தலைமை தாங்கிய போது ரஷ்யாவுக்குள்ளே தலைமறைவுக் கட்சியை கட்டியமைத்தது ஸ்டாலின்தான்.

அப்போது 1912ல் ட்ரொஸ்கி "ஆகஸ்ட் குழு" என்பதை மும்முரமாக ஒழுங்குபடுத்தினார். அவர் இதில் லெனினுக்கும் போல்ஷ்விக் கட்சிக்கும் எதிரான குழுக்களையும் போக்குகளையும் ஒன்றிணைத் தார். அப்பொழுதுதான் லெனின் அவரை "யூதாஸ் ட்ரொஸ்கி" என்று அழைத்தார்.



லெனின்

1917 மே 7ம் திகதி முதல் 12ம் திகதி வரை நடைபெற்ற மாநாட்டில் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஸ்டாலின் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இந்த மாநாட்டில் ஏற்படுத்தப் பட்ட அரசியல் குழுவுக்கும் அவர் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் மத்திய கமிட்டியின் மூன்று செயலாளர்களில் ஒருவராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். கட்சி ஏடான "பிராவ்டா"வின் பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

1917ம் ஆண்டு ஜூலை 26ம் திகதி முதல் ஆகஸ்ட் 3ம் திகதி வரை நடைபெற்ற போல்ஷ்விக் கட்சியின் ஆறாவது காங்கிரசில்தான் ட்ரொஸ்கியை ஒரு உறுப்பினராக சேர்த்துக் கொள்வது என்று தீமானிக்கப்பட்டது. அப்பொழுது லெனின் பின்லாந்தில் இருந்து மாநாட்டிற்கு வழிகாட்டினார். ஸ்டாலின்தான் மாநாட்டிற்கு தலைமை தாங்கி பிரதான அறிக்கையை சமர்ப்பித்தார். இதிலிருந்து அக்டோபர் புரட்சியின் போது லெனினுக்கு அடுத்தபடியான பாத்திரத்தை வகித்தவர் ஸ்டாலின் என்பது தெளிவாகிறது. இதனால்தான் 1922ல் துப்பாக்கிக் குண்டின் காயம் காரணமாக லெனின் செயல்பட முடியாது இருந்த நிலைமையில் கட்சியின் பொதுச் செயலாளராக லெனின் வாழ்ந்த காலத்திலேயே ஸ்டாலின் தெரிவு செய்யப்பட்டார்.

இவற்றை மறுக்க முடியாத ட்ரொஸ்க்கியவாதிகள் இறுதியில் பற்றிக்கொள்ளும் விடயம் லெனின் மரணசாசனம். இது உண்மையில் எதிர்வர இருந்த காங்கிரசுக்கு லெனின் சொல்ல எழுதப்பட்ட கடிதமாகும். இந்த காங்கிரஸ் லெனின் மறைவின் பின் 1924ம் ஆண்டு மே 24ம் திகதி முதல் 31ம் திகதி வரை நடைபெற்றது. இந்தக் கடிதத்தை காங்கிரசில் வாசிக்க வேண்டும் என்பதே லெனினுடைய வேண்டுகோள். அதன்படி ஸ்டாலினே இக் கடிதத்தை வாசித்தார். இக்கடிதத்தில் ஸ்டாலினும் விமர்சிக் கப்பட்டிருந்தார். ட்ரொஸ்கியும் விமர்சிக்கப்பட்டிருந்தார். ஆனால் ட்ரொஸ்க்கியவாதிகள் கூறுவது போல் பொதுச் செயலாளர் பதவிக்கு ட்ரொஸ்கியை நியமிக்கவேண்டும் என்று அதில் கூறப்படவில்லை. இந்தக் கடிதம் வாசிக்கக் கேட்ட பின்னர்தான் காங்கிரஸ் ஸ்டாலினை பொதுச் செயலாளராக தெரிவு செய்தது. ஒரேயொரு வாக்கு ட்ரொஸ்கியின் வாக்குதான் எதிராக விழுந்தது. அவர் தனக்குத்தானே வாக்களித்தார்.

ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி எனவும் அவர் ட்ரொஸ்கிக்கு போதிய விவாத வாய்ப்பு அளிக்கவில்லை எனவும் ட்ரொஸ்க்கியவாதிகள் சேறு பூசுகின்றனர். இது முற்றிலும் பொய். சர்வதேச கம்யுனிச இயக்கத்தின் வரலாற்றில் ஸ்டாலினைப் போல் இவ்வளவு அதிகாரம் படைத்திருந்த ஒரு தலைவர் தனது எதிரிக்கு ஸ்டாலின் ட்ரொஸ்க்கிக்கு காட்டியது போன்ற பொறுமையைக் காட்டியது கிடையாது.

விவாதங்கள் போல்ஷ்விக் கட்சிக்கு உள்ளேயும் கம்யுனிச அகிலத்திற்கு உள்ளேயும் பல்லாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வந்தது. மீண்டும் மீண்டும் ட்ரொஸ்க்கி தோற்கடிக்கப்பட்டார். ஆனால் அவர் தோல்வியை ஏற்றுக் கொள்ளவில்லை.

1927 அக்டோபரில் நடைபெற்ற கட்சியின் 15வது மாநாட்டிற்கு முன்னர் ஒவ்வொரு உறுப்பினரினதும் நிலைப்பாட்டை அறிவதற்காக வாக்கெடுப்பு ஒன்று நடைபெற்றது. 724,000 உறுப்பினர்கள் ஸ்டாலின் தலைமையிலான மத்திய கமிட்டியின் கொள்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். 4000 பேர் ஆதாவது ஒரு சத வீதத்திற்கும் குறைவானோர் ட்ரொஸ்க்கிய குழுவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இது ட்ரொஸ்க்கிக்கு கிடைத்த இறுதி அடியாகும்.

ட்ரொஸ்க்கிக்கு வேண்டியது ஜனநாயக விவாதமும் தீர்ப்பும் என்றால் அது போதிய அளவு கிடைத்தது. ஆனால் அவர் திருந்தவில்லை. தனது குழுவாத நடவடிக்கைகளை கைவிடவில்லை. கட்சியின் பொறுமை சோதிக்கப்பட்டது. 1927 நவம்பர் 14 திகதி மத்திய கமிட்டி ட்ரொஸ்க்கியை வெளியேற்றியது. சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையில் அவர் சோவியத் யூனியனின் ஒதுக்குப்புறக் குடியரசு ஒன்றிற்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால் அவர் இந்த நிபந்தனையை மீறியபடியால் ஒருவருட முடிவில் சோவியத் யூனியனில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

சோவியத்யூனியனில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி ரயாகரன்
பிரான்ஸ்



சமூகம் என்பது மக்களாலானது. ஆனால் மக்கள் என்பவர்கள் பல வகையாக பிளவுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த சமூகப் பிளவு எப்போதும் ஒரு சிறு பகுதிக்கு சதாகமாகவே உள்ளது. இந்த சிறிய பகுதி மொத்த மக்களையும் தனது சொந்த நலன் சாந்து, எதோ ஒரு வகையில் அடக்கியாள்கின்றனர். இதுவே இன்றைய எதார்த்த உலகம்.

இந்த வகையில் தான் இனப் பிளவுகள், சாதிப் பிளவுகள், வர்க்கப் பிளவுகள், பால் பிளவுகள், பிரதேச பிளவுகள், நிறப்பிளவுகள் என்று எண்ணற்ற சமூகப் பிளவுகளை அடிப்படையாக கொண்டு, ஒரு பகுதி சுபீட்சமாக வாழ்கின்றனர். இவர்களின் நலன் தான் இன்றைய ஜனநாயகம், இன்றைய சுதந்திரம் என்பது எதார்த்த உலக விதியாக உள்ளது.

இந்த சுதந்திரம், ஜனநாயகம் மற்றொரு மனிதனை ஒடுக்கி வாழ்வதை நியாயப்படுத்துகின்றது. இதை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நலனுக்காக போராடுவதே ஒரு சமூக நோக்குள்ள பத்திரிகையில் கடமையாகும். இதை மறுப்பதை, கண்டுகொள்ளமல் விடுவதை, ஒரு துறையில் மட்டும் எதிர்த்து மற்றையவற்றில் ஒடுக்க துணைபோவதை தேசம் அனுமதிக்க கூடாது. சமூகப் போக்கில் முரணற்ற வகையில் எழுத்தை கண்கணிக்க வேண்டும் இது தான் பத்திரிகை ஆசிரியரின் கடமை. இதற்கு வெளியில் வெறும் தொகுப்பளாராக பத்திரிகை ஆசிரியராக இருப்பது என்பது அர்த்தமற்றது.

இந்த வகையில் தேசம் தனது ஒவ்வொரு கட்டுரையையும் பகுத்தாய்வுக்குள்ளாக்க வேண்டும். கட்டுரைகளை ஆசிரியர் விமர்சனத் துக்குள்ளாக்குவதன் மூலம், வாசகர்களை உற்சாகமான பங்களிப்புக்கு வழிகாட்ட வேண்டும். ஒரு கட்டுரையில் பல முனைபட்ட கூறுகளை உள்ளடக்கிய வகையில் கேள்விகளை எழுப்பி விளக்கங்களை முன் வைப்பதன் மூலம், கட்டுரையாளன் முரணற்ற வகையில் கருத்துகளை முன்வைக்கத் தூண்ட வேண்டும்.



## எதிர் முனை

பொதுவாகவே தமிழ் சமூகம் இன்று மிக மோசமான பின்தங்கிய அறிவியல் மட்டத்தில் காணப்படுகின்றது. தனிமனித வழிபாடும், இருக்கின்ற மாவையே மீண்டும் மீண்டும் அரைக்கின்ற சமூகப் போக்குகளையும் கடந்து செல்ல தேசம் முயலவேண்டும். சமூகத்தை இருக்கும் மட்டத்தில் இருந்து, மேலே நகர்த்தும் வகையில் அதை தூண்டும் வகையில் விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட வேண்டும்.

இன்று பொதுவாக வாசிப்பு தன்மையை சமூகம் மட்டு மல்ல, இன்றைய எழுத்தாளர்க ளும் கூட செய்வதில்லை. இது தேசத்தில் எழுதும் எழுத்தாளருக்கு விதிவிலக்கல்ல. அறிவின் சூனியத்தில் சமூக அறியாமை மீது எழுத்தாளர்கள் தமது சமூக மேலண்மையை தக்க வைக்கும் இன்றைய போக்கு தேசம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உணர்வுபூர்வமாக செயல்படுவது அவசியம். ◆

---

க வன்னிபிரகாஸ்
லண்டன்

உங்கள் பணி தொடர என் மாணசீகமான வாழ்த்துக்கள். மேலும் தேசம் சஞ்சிகை இளைய தலைமுறையினரை அரவணைத்து செல்லும் என நான் நம்புகிறேன்.

1.புலம்பெயர்ந்த நாட்டில் எமது தொப்புள் கொடி உறவுகள் குற்றவாளிகளா? அதுவும் இளைய தலைமுறை யினர் குற்றவாளிகளா?

2.குற்றாளிகள் உருவாகவில்லை உருவாக்கப்படுகிறார் கள். இது தான் உண்மை. இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார்? இதனால் அவர்கள் அடையும் லாபம் என்ன?

3.தேசம் சஞ்சிகை இளைய தலைமுறையினரின் கருத்துக்களை செவிமடுக்குமா? அவர்களுக்காகக் குரல் கொடுக்குமா?

4.இளைய தலைமுறையினரை குற்றவாளியாக பயன்படுத்தி சுயலாபம் பெறும் சுயநலவாதிகளை இனம் காட்டுமா? ◆

**தேசம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறோம்.**

---

>>>

ட்ரொஸ்க்கியின் நடவடிக்கைகள் பற்றியோ சர்வதேச சோவியத் எதிர்ப்பு நடவடிக்கையின் கேந்திரமாக அவர் எப்படி மாறினார் என்பது பற்றியோ இந்தக் கேந்திரம் அவரது ஆடம்பரங்களுக்கு எவ்வாறு பெரும் தொகை பணத்தை செலவழித்தது என்பது பற்றியோ அவர் இறுதியில் பெரிதும் அரண் செய்யப்பட்ட கோட்டையில் குடியேறினார் என்பது பற்றியோ இறுதியில் அவருடைய பெண் காரியதரிசியின் காதலனால் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது பற்றியோ இங்கு விரிவாக கூறவேண்டியதில்லை. அவை அனைவரும் அறிந்த வெட்ட வெளிச்சமான விடயங்கள்.

ட்ரொஸ்க்கியவாதம் என்பது தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு உள்ளேயிருந்த தவறான தத்துவம் என்ற நிலைமையில் இருந்து பகிரங்கமான எதிர்ப்புரட்சித் தத்துவமாக மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளாவி நாவலாசிரியர் விமல் குழந்தைவேல் நூல்விமர்சனம் செய்கின்றார். நூலாசிரியர் இளைய அப்துல்லாஹ் (வலம்). தலைவர் எஸ் எம் எம் பசீர் (இடம்)




பெண்ணிய எழுத்தாளர்கள் திலகபாமா (இந்தியா), றஞ்சி (சுவிஸ்) பெண்ணிய எழுத்துக்கள் பற்றி உரையாற்றுகின்றனர்.




# 'துப்பாக்கிகளின் காலம்'

இளைய அப்துல்லாஹ்வின் 'துப்பாக்கிக ளின் காலம்' நூல் வெளியீடும் பெண்ணிய எழுத்துக்கள் பற்றிய உரைகளும் தேசம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஒக்ரோபர் 16ல் இடம்பெற்றது. த ஐலன்டேர்ஸ் ரெஸ்ரோரன்றில் இடம்பெற்ற இந்நிகழ்வு இலங்கை, இந்தியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்திருந்த பெண்ணிய வாதிகளையும் இலக்கிய ஆர்வலர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பாக அமைந்திருந்தது.

நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கிய எஸ் எம் எம் பசீர் இந்நூல் முஸ்லீம்களின் சோகத்தை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை எனக் குறிப்பிட்டார். அவர் தொடர்கையில் தமிழ் தேசியம் பற்றி எழுதும் எழுத்தாளர்கள் முஸ்லீம் சமூகத்தை கண்டுகொள்ளாமல் எழுதுவது வரலாற்றுத் தவறு என்றார். சிவநாயகம் தனது 'பென் அன்ட் த கன்' நூலில் முஸ்லீம்கள் பற்றிக் குறிப்பிடத் தவறியதை பசீர் சுட்டிக் காட்டினார்.

உமா உட்பட நூல்விமர்சனத்தை மேற் கொண்டவர்கள் முஸ்லீம்கள் 24 மணி நேரத்தில் பிடுங்கி எறியப்பட்ட சோகத்தை நூல் பதிவு செய்திருப்பதை பாராட்டினர். உமா பெண்ணிய பார்வையில் சிறுகதைகளை ஆய்வு செய்தார்.

இந்நூலில் இளைய அப்துல்லாஹ் தன்னை ஒரு முஸ்லீம் எழுத்தாளனாக அடையாளம் காட்டத் தவறியதை விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். கன்னி விமர்சனத்தை செய்த விமல் குழந்தைவேல் ஒரு படி மேல் சென்று எழுத்தாளன் தான் வாழும் சமூகத்தை பிரதிபலிக்க வேண்டும் என்றும் ஆனால் நூலாசிரியர் தனது முஸ்லீம் அடையாளத்தை தக்க வைக்காமல் ஒரு தமிழ் எழுத்தாளர் ஆகிவிட்டார் என்றும் குறிப்பிட்டார். விமல் மேலும் தொடர்கையில் சாகித்தியமண்டல விருது பெற்ற ஒரு எழுத்தாளனிடம் இருந்து வரும் படைப்புகள் இன்னமும் காத்திரமாக அமைந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

புலோகலிங்கம் தனது விமர்சனத்தில் வன்முறைச் சூழலை விபரித்தார். துப்பாக்கிகளின் காலம் போல் வன்முறை வடிவம் கொண்ட பெயர்களுடன் எதிர்காலத்தில் படைப்புகள் வெளிவருவது யதார்த்தமாகி உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். பாருக் தனது விமர்சனத்தில் நூலாசிரியரின் எழுத்தாற்றலைப் பாராட்டினார்.

நிகழ்வில் சுசீந்திரன் மறைந்த எழுத்தாளர் சுந்தர ராமசாமிக்கு அஞ்சலி செலுத்தினர். கவுன்சிலர் போல் சத்தியநேசன், ரவீந்திரமோகன் ஆகியோரும் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் தேசம்

THESAM SIRUVAR

Oct 05 / Nov 05

09

ஓகஸ்ட் 13 இடம் பெற்ற ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள் நூல் வெளியீட்டு விழாவின் ஒரு பகுதியாக வாசிப்பு - நூல் - நூலகங்கள் என்ற தலைப்பிலான இளம் தலைமுறையினரின் சிறப்பான உரைகளும் இடம்பெற்றது. அவற்றை சிறுவர் தேசத்தில் சேர்த்துள்ளோம். செல்வி ஓவியா, செல்வி அனாமிகா ஆற்றிய உரைகள் அடுத்த சிறுவர் தேசத்தில் இடம்பெறும்.




# Reading

By Ramesh Pyron

Reading is an essential part of our lives. It can help you in all aspects of life. Books, magazines and newspapers are all under the category of reading.

Whether you read a magazine to get hold of all the rumours about Posh and Becks, or read a newspaper to find out whether Sri Lanka beat Australia in cricket, reading holds the key to all of these things.

I don't think reading should have to be educational. Reading should be something you enjoy which can interest you for various periods of time.

If you can read from a young age it will benefit you immensely. Whether it's a Batman comic or even an encyclopaedia on Nature, reading should be a part of your life.

I think that reading is a talent, a talent that we all possess and we should use that talent in every way possible.

Reading is a hobby that helps you to achieve a good education and obviously get well paid and respectable jobs like a doctor not even a Ph.D. but a medical doctor. Which is every Tamil parent's dream!

You can have intelligent conversations with any level of people, from your baby brother to even the Prime Minister.

It has been recently proven that Indians are the world's biggest bookworms. Reading an average of 11 hours a week, which is as long as both the Americans and the British put together.

I think this is because we in Britain spend most of our time watching television and playing Playstation games.

In order to increase the reading hours of children from a young age, every child under four is to be given a bag of books.

Ruth Kelly who is our current educational secretary has introduced this scheme. The scheme has been aimed to promote early reading. These books will be given free to families through libraries, health clinics and Sure Start nurseries.

This new scheme is going to cost the Labour Government £27 million, which will also include crayons, scribble pads and invitations to join the local library.

Currently there is a system used in libraries called the Reading Voyage. When you read a certain number of books you will be awarded with prizes.

You only have to sign up for this with your local library. It's free to all members.

All this effort has been put into helping children read. So now it is really in our hands of what comes out of it.

If there wasn't any reading, J.K. Rowling would be just like one of us. There wouldn't be a famous wizard called Harry Potter.

Reading holds the keys to success and so if you read you will surely succeed.

Thank you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reading, Writing and Literature

By Nelson Sivalingam




Hi! My name is Nelson Sivalingam, and I am currently doing my A levels in maths, biology, chemistry and psychology. I've been asked by Jeyabalan uncle to speak at this book release about the advantages of reading, writing and literature, which I will try my best to do.

First of all, I would like you all to excuse me for not speaking in Tamil. I am capable of speaking in Tamil, with the use of English words here and there, however I chose not to. The reason for this is that although I can speak in Tamil, I can't read or write therefore I'm illiterate in that aspect. So I didn't want to speak about the advantages of literacy as an illiterate Tamil speaker, but chose to speak as an English speaker who understands the impact of literature.

Literature is something that cannot be forced upon someone but is an interest that will develop from within. When I was younger I didn't have an interest in reading. I saw it as a waste of time. I didn't understand why in your free time you would want to pick up a book and read when the TV was only one push of a button away. My dad always used to tell me to read. He reads a lot. My dad has a mini library at home, which when I was younger I would walk past as if it were shelves full of ornaments. Things that was good to look at, but not to pick up and use.

When holidays came my dad would tell me to go to the library and get a book. Back then the library was hell to me. But then I would get a book but never read it. Then my dad would ask, "Showikku book yedithai?"

To avoid my dad telling me off, I would set up a book on the table then go and watch TV. Then when I heard the sound of the door opening, I would run to the table and pretend I was reading and then I would say, "Evala neeram vaichan, break eduka pooran." So I didn't do much reading when I was younger.

But then gradually I developed an interest. A curiosity to learn more grew within me and it is still growing. In order to feed that curiosity, I read books. I started reading newspapers. I think the first time my dad saw me reading a newspaper, he nearly fainted in shock. But now I read the paper everyday because I'm curious to find out what's going on. When I hear about a book that is selling well, I'm curious to read and find out why that book is doing so well.

Since I started reading it has opened many doors for me. I have a greater knowledge about a wide range of subjects. After reading I have also become a better writer. My choice of vocabulary has expanded. I'm almost like an English Vairamuthu. But what has kept me interested in literature is the number of inspirational writers like; J.K. Rowling who wrote Harry Potter, which not only applies to young people but people of all ages. Also, Paulo Coeltto who wrote 'The Alchemist', which has been reviewed as 'life changing.'

Although I can't read Tamil, I am also aware of inspirational Tamil writers like Sujatha who is capable of writing in a wide range of styles and dialects. Another inspirational writer is Dr. S. Thiyagarajah himself. Not only through his book about the roots of Tamil people through his archaeological findings but also he is an inspiration because of what he has achieved in life.

However, we cannot force young people to read but we can encourage them by telling them the benefits. I still want to read more, and learn more. One of my ambitions is to learn to read in Tamil and be able to read these books that are being released as well as the cinema column in Tamil magazines.

If we don't want this sort of book release function to stop with this generation, it is important we encourage the younger generation. There is a saying that everyone has a book in them, meaning everyone is capable of being a writer. Instead of parents only encouraging their children to become doctors, lawyers and engineers they should encourage them to become good writers. There is a whole new world out there, once you start reading. So start.

Thank you for listening.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality**

**Employment**

**Landlord & Tenant**

**Housing**

**Welfare Benefits**

**Matrimonial**

**1st floor**
**128 Ilford lane**
**Essex IG1 2LE**

**Tel: 020 8478 5797**
**Fax: 020 8478 4486**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Low Cost Accomodations in London

## Finchley Rd, Archway, Holloway Rd

## Tube station அருகாமையில்

- Flats
- Studios
- Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவிடங்கள்
வாடகைக்கு உண்டு.
சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான
போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாது வாடகை £ 400 - £ 600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். குறைந்தது ஆறு மாதகாலத்துக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**Tel \ Fax : 020 8905 0452**

**Email : tarrin@desilugroup.com**

**Web : www.deilugroup.com**

**Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org